15

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

3-OCT 1911
MADRAS.

# நளச்சக்கரவர்த்தி

## கும்மி.

15
4.1911

இஃது

திரிசிரபுரம், அநட்க[illegible]

நா. வீராகவதாஸரவர்களால்

இயற்றியதை.

இவை,

திரிசிரபுரம்--புக்ஷாப்

அ. மாமுண்டிபிள்ளை

அவர்களால்

Sanganidhi Vilakkem Press

MADRAS.

ரிஜிஸ்டர் காப்பிரைட்,

விலை] 1911 [அணா-௨

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்,

# நளச்சக்கரவர்த்தி

## கும்மி

15
4 · 1911

இஃது,

திரிசிரபுரம், அருட்கவி,

நா. வீரராகவதாஸரவர்களால்

இயற்றியதை,

இவை:

திரிசிரபுரம்—புக்ஷாப்

அ. மாமுண்டிபிள்ளை

அவர்களால்,

Sanganidhi Vilakkem Press

MADRAS.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

விலை] 1911. [அணா 2

OFFICE OF THE ... 3 ... 1911 MADRAS

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இதைவாசிப்போர்களடையும்பயன்

நேரிசைவெண்பா.

திட்டமுடன் பூவிலுள்ளோர் செம்மல் நளன்கும்மிதனை
இட்டமுடன் வாசிக்க யாவர்களுஞ்—சட்டமாய்
வைகுண்டமும் பெருவர் வருஞ்சனியனிடர் தவிர்க்கக்
கைகண்ட வவிழத மிது காண்.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—திரிசிரபுரம் அருட்கவி) நா-வீரராகவதாஸரவர்களாலியற்றிய (நளச்சக்கிரவர்த்திகும்மியை திருச்சினாப்பள்ளி புக்ஷாப் அ. மாமுண்டியாபிள்ளையாகிய நான் ஷெ யாரிடம், யெடிட்டர் பாத்தியதை சகல சுதந்திரமும் கிரயம் பெற்று அச்சிட்டு, கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்திருப்பதால் இப்புத்தகத்தை யாவது, இப்புத்தகத்துள்ள பாகங்களில் எதையாவது, பெயரை மாத்திரமாவது, அச்சிடத் துணிவீர்களாகில் 1887—ஞு 2—வது ஆக்ட்டு 20—வது பிரிவில்—6—வது விதியின்படி நஷ்டபாத்தியதைக்கும் கவர்ன்மெண்டாரால் விதிக்கும் கிரிமினல்தண்டனைக்கும் பாத்திரர்களாவீர்களெனத் தெரிவிக்கின்றனன்.

இப்படிக்கு,

அ. மாமுண்டியாபிள்ளை

புக்ஷாப்-திருச்சினாப்பள்ளி.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# நளச்சக்கரவர்த்திக்கும்மி.

## நேரிசைவெண்பா.

சீர்புகழும் நிடதநகர் செம்மல் நளன்கும்மிதனைப்
பார்மகிழப் பாடுதற்குப் பண்புடனே—நேர்திகழும்
அந்திவண்ண னம்பிகையி னன்னைவயற்றிற் பிறந்த
கந்தனுக்கு முன் வந்தோன் காப்பு.

## கும்மி.

தெண்டிரைசூழுல கெங்கனுந்தன்கீர்த்தி செல்லும்படிக்கவனோர்குடையாய்க், கண்டிடும்பதியாளுமன்னவன்றன் கதையைச் சொல்கிறேன் கேளுங்களே. (1)

மூப்போகம்விளையு மந்நாடாம்நெற்கள் முத்தைப்பழித்திடும் நந்நாடாம், செப்பமாய்ஆறுகள்வோடைகள்சூழ்ந்த சிமையதாவாகும் பாருங்களே. (2)

புன்னைவிருட்சை பலாவேம்புநாவல் புளியன்பூவரசு நெல்லி வாழை, கொன்னைவன்னியாத்தி மாவுங்கொய்யாவொடு கும்பல் நிறைந்தவூர் பாருங்களே. (3)

மல்லிகைமுல்லை யிருவாட்சி மயிர் மாணிக்கம் வெட்டிவேர் கதிர்பச்சை, வில்வமரளிசெவந்திரோஜா[illegible]கம்பூத்தவூர் கேளுங்களே. (4)

இவ்வகைபூத் தங்கிருக்கும்வனத்திலே யெங்கோமும்வண்டுசங்கீதம், செவ்வையாய்ப்பாடிடும் அன்னமயில்குயில் சிறந்தாடுமென்றறியுங்களே. (5)

சுந்தரமாயக்கிராமத்திலந்தணர் சூட்டிநான்காஞ்சாமத்திலெழுந்து, விந்தையதாஸ்தான கன்மங்களைச்செய்து வேதங்களோதுவூர் பாருங்களே. (6)

நாலுவீதிதெருவழகும் நட்ட நடுவேகடைகள் சூழ்ந்திலங்கும், கோலக்கோபுரமதில்கள்வாய்ந்த கோவிலெங்குமுண்டு பாருங்களே. (7)

தானதருமங்கள் மென்மேலும் அவர் தான்செய்யச்சத்திரம் யெங்குமுண்டு, ஆனபடிமுப்பத்திரண்டறங்களு மப்பதிசெய்கிறார் கேளுங்களே. (8)

பொய்ச்சூதுகளவு மோசம்பறநிந்தைப் போக்கிரித்தனமுங் கிடையாது, மெய்யைப்பேசிதேவபக்தியோடவ்வூரில் விரும்பிவாழ் கிறார்பாருங்களே. (9)

கோவும்புலியும் வொருதுறையிற்றண்ணீர்க் குடிக்குஞ்சர்ப்ப மும்கீரிவொன்றாய், போயிருக்கஅவ்வரசன்சத்திய மேன்மையைச் சொல்கிறேன் கேளுங்களே. (10)

மாதமதில் மூன்றுமாரிபெய்ய அங்கு மறையோர்வேதமும் தான்படிக்கத், தீதிலையப்பதிநால்வர்ணமோங்கிச் செழித்துவாழ்கி றார்பாருங்களே. (11)

இவ்விதமுடையநகருக்கரசன் யேற்றநளச்சக்கரவர்த்தி அவன் செவ்வையாய்நிடத நாட்டுடைவள்ளலச் சீமைபோலெங்குங்கிடை யாதாம். (12)

நவகண்டமதையோர்குடையாயாளும் நளச்சக்கரவர்த்திமஹா ராஜன், அவனியிலவனைப்போல் சத்யசந்தன் யாருமிலையென்றே துங்களே. (13)

தேசமதில்வெகு கீர்த்திபெற்றதிவ்ய தேசம்நிடதமெனும்பதி யை, நேசமுடன்நளச் சக்கரவர்த்தியவர் நீதியாய் ஆண்டுவரும் நாளில். (14)

புலியும்பசுவுமோர் துறையிற்றண்ணீர்ப் பொருந்திக்குடிக்கப் பசுவா[illegible], [illegible]ப்புலியுளம்கர்விக்க நாடிச்சக்கரம்வந்தே யறுக்க. (15)

இப்படிமன்னரசாள வோர்தினம் யேற்றநிலவில்மலர்ச்சோலை யில், செப்பமுடன்பலர்சொல்லத்தமயந்தி செந்தேனைநினைந்துருகி யவன். (16)

பஞ்சணைமெத்தையிற் றான்படுத்து அவன் பரிந்துகாமத்திறைற் சோர்ந்து, சஞ்சலமுற்றவன்மாயனைநினைந்து தமயந்தியைப்பெண் ணைக்குமென்று. (17)

இவ்விதந்தன்னுள மெண்ணியிருக்கவும் யின்பமுற்றன்னங்கள் தானும்வர, செவ்வையாய்ப்பார்த்ததில்வொன்றைப்பிடித்திடத் தெ ருமென்றனவன்னமுரைத்ததுபார். (18)

பூதலத்தையாளுமன்னவரேநீரும் புரிந்துநியாயமறிந்திருப்பீ
ர், ஆதலால்யென்னைப்பிடித்ததுநீதியோ அய்யனேநான்செல்ல வே
ண்டுமென்ன. (19)

இப்படியுரைக்கவேந்தனுங்கேட்டு நான்பிச்சைகொண்டுன்னை
ப்பிடித்தேனென்ன, அப்பொழுதன்னமும்யேற்றுசில சேதியவ்வர
சனிடஞ் சொன்னதுபார். (20)

பூமிதனையோர் குடையாகவேயாளும் புண்ணியரே நீர்தினமு
ருகிக், காமத்தினால்மெலிந்தையமுறுகிறீர்காணுந் தமயந்திப்பெண்
மீதென்ன. (21)

இவ்விதம்நான்சொன்ன பெண்ணையானுமுமக் கெப்படியாகி
லுங்கல்யாணம், செவ்வையாய்ச்செய்யும்படிமுடிப்பேன் யென்னைச்
சீக்கிரம்நீர் விடுமென்றுசொல்ல. (22)

சொல்லுரைகேட்டதிபன்மகிழ்ந்துநீயுஞ் சொன்னதெல்லாஞ்
சரிஅம்மயிலே, நல்லதோரன்னமேயென்னைமணஞ்செய்ய நாட்டுதல்
நின்பாரமென்றுரைத்து. (23)

ஆதலால்நின்னையான்விட்டுவிட்டேனிதோ வானகாரியமுடிக்
கவேணும், சாதகமாய்ச்சொல்லிவிடுக்கப்பின் யொன்றைத்தானி
னைந்தேன் சாற்றிப்போவீரென. (24)

இங்ஙனம்புகலப் பட்சியதுவென்ன வேந்தேநீ ருரைப்பீரெ
னவும், அங்ஙன்தமயந்தி யழகுந்தன்னையத்தை விளம்புமெனக்
கேட்க. (25)

கேட்டவுடன்பட்சி யரசனைகேளும் கிளருந்தமயந்தியழகை
வாட்டமுடன்சொல்ல சேடனாலாகாதோர் வாயுள்ளவனெப்படி
யுரைப்பேன். (26)

ஆனாலிப்படியுமிருக்கயென் னாலறிந்தவரையிற் சொல்கிறே
ன்கேள், நானிலந்தன்னில்விதர்ப்பமதையாளும் நல்லரசன்வீமன்
யென்றுரைப்பார். (27

அன்னவனுமவன்பத்தினிதனக்கும் அருமைமகவொன்றில்லா
மல், தன்னந்தனியேகான்சென்றுதவஞ் செய்யத்தமயந்திபிறந்தாள்
பாரும். (28)

அப்படிப்பெற்ற தன்பெண்ணையவர்களும் அன்பாய்வளர்க்க
வவள்வதனம், செப்பமுடன்மூன்றாம்பிறையைப்போன்றதாம் சீர்
பெரும்பற்கள்முத்துடையதாம், (29)

வில்லைப்போன்றயிருபுருவமாகுமாம் விளங்குநாசிக்கு மிழம்பூவாம், சொல்லுமொழிகுயிலிசையுமாகுமாம் சூட்டுமிதழ்பவளம் போன்றதாம். (30)

வரையைப்போன்றயிருதனமாம் வயர் வண்ணமோடாலிலை போன்றதுலாம், நிரைகொளும்வார்த்தைமதுரக்கற்கண்டாம் நேர் துடைகள்ரண்டும் வாழைத்தண்டாம். (31)

பட்டையுடுத்தியவ்வன்ன நடையொத்தப் பாவையினழகைக் கையால்தொட்டு, பொட்டிட்டுநாம்வைத்துக் கொள்ளலாமப்பெண்ணின் பூஷணசிறப்பையென்னசொல்வேன். (32)

இப்படியழகுவாய்ந்திடுங்கன்னியை யெப்படியுஞ்சென்றுநானுமக்குத், தப்பிதமன்றிமணமுஞ்செய்து வைப்பேன் சத்தியமாய் நம்பும்மென்வார்த்தை. (33)

என்றுசொல்லக்கேட்டு மன்னன்விடவங்கு யேகிவிதர்ப்பநகரனில், நன்றுடன்முன்னம் பலருரைக்கக்கேட்டு நளனைநினைந்துநங்கைதானும். (34)

பஞ்சணைமெத்தையில் காமத்தினால்சோர்ந்து படுத்திருக்குந்தமயந்திமுன், அஞ்சாதன்னமவளிடம் நடைகற்க வனுகல்போலம்ஷமங்குவர. (35)

வந்ததைப்பார்த்துத்தமயந்திமாரனும் வாடிவயரகமதுமுனம், சந்தோஷமாகவனுப்பினான்பாரென்று தையல்மனம்நொந்து சாற்றுகிறாள். (36)

தாதியரேநீரும் நானுமிவ்வன்னத்தைத் தப்பாமல்பிடிக்கவேணுமென்று, ஓடிச்சென்றுபிடித்திட அன்னமொன்று வுத்தமிகையகப்பட்டதுவே. (37)

இப்படிக்கொண்டதோரன்னத்தைத்தன்கரம் யேற்றுத்தடவவும்வேர்த்திருக்க, அப்போதமயந்தியிவ்விதகாரிய மானதையுரையுமென்றுகேட்க. (38)

கேட்டவுடன்அன்னம்நளச்சக்கரவர்த்திக்கிளரும்நாயகனவாரென்று, வாட்டமன்றியவரழகைவர்ணித்து வஞ்சிமுன்னுரைக்கவகைகொண்டாள். (39)

கொண்டவள்நீயுரை சொன்னதுமெய்யாகும் கோரிநானவரைநாயகனாய், அண்டிடநீசெய்யுபகாரத்திற்கு நான்யாதுசெய்யப்போறேனென்றுரைக்க. (40)

ஈதியம்பத்தமயந்தியின்முன்விடை யேற்றன்னமுற்றுநளனிட மாய்ப், போதுவந்தவளழகைச்சொல்லிமணம் புதுக்கப்போமென் றுரைத்ததுவே, (41)

இப்படிப்புகன்றங் கன்னங்கள்தான்செல்ல யேற்றரசன்வேளி ன்வாரதையினால், அப்போதுகாமமதிகரிக்கஅவன் ஹரியைத்தோ த்திரஞ்செய்திருக்க. (42)

அங்குதமயந்திகாமத்தினால்சோர்ந்து அன்னமுண்ணாமல் நள னையெண்ணி, மங்கிக்கிடந்தெவரிடமும்பேசாமல் மௌனமுறத்தா தியர்கள்கண்டு. (43)

தாதிகள்பார்த்துத்தமயந்தியின்றந்தை சாரும்வீமனெதிர் தாங் கள்வந்து,மாதவள்நளன்மேற்கொண்டமயக்கத்தை மர்மமன்றிசொ லத்தானறிந்து. (44)

அப்போதைம்பத்தாறுதேயருக்கும்பிற கானதமயந்தியானவ ட்கு, செப்பமுடன்சுயவர மெனச்சொல்லி சீக்கிரம்வோலையைத் தானெழுதி. (45)

தூதுவர்கையீந்து யீயவிடுத்தபின் தொல்லுலகையலங்காரஞ் செய்து, ஒதும்பேரிகையடிக்கச்செய்துபல ருகந்தவ்விடமிருக்கை யிலே, (46)

மன்னவர்கூட்டங்கள்தானும்வரநள மஹாராஜனவன்மாதவனை, தன்னுளமிருத்திமேளதாளத்துடன் ருனும்ரதமேறித்தானும்வர. ()

சங்கிந்தக்காரியந்தான்நடக்கஅதை யேற்றுநாரதனவன்பார்த் து, அங்குவிண்ணவர்கோனிடஞ்சென்று தம யந்தியழகைவர்ணித் துச்சொல்ல, (48)

சொன்னவுடன்காமந்தலைக்கேறி அவன்றேணித்திக்குப்பாலர் மூவருடன், நன்னயமாய்ரதமேறிக்கணத்தில் நாடிவந்துநளன்றன் னைக்காண, (49)

கண்டுநான்குபேரும்நீரோருபகாரங் கருதிச்செய்வீரதென்ன வெனில், வண்டுமொய்க்குங்கூந்தல் தமயந்திதன்னால் வாடுறோம் தூதாகச்செல்லுமென்ன, (50)

என்றுசொல்லக்கேட்டுத்தாங்களோதேவர்கள் பின்பதுண்பம் பிணிக்குள்ளாநரன், கன்றைத்தேடும்பசுப் போலநானுமிந்தக்கன்னி யால் வாடியேவந்தேனென்ன, (51)

அவ்வுரையைக்கேட்டு தேவர்களானவ ரானதப்படியிங்கானு னும், ஒவ்விபேயெங்களால் பெண்ணிடம்நீர்செல்ல வுருபந்தெரியாமல் செய்வோமென்ன, (52)

தமயந்தியெனுங்கன்னியால்காமத்தில் தடுமாறி யலைந்தாருகுறோம், அமந்துசென்றெங்கள் தூதனென் றுசொல்ல வாகும்புண்யம் விஞ்சயறியென்ன, (53)

இந்தவிதந்தேவர்தொந்தரைசெய்திட பேனிவர்களின் விரோதமென்ன, பந்தனத்துடன்மனதெண்ணிச்செல்வதாய்ப் பார்த்திபன் நளனுமொப்புக்கொண்டு, (54)

தேவர்களானபெரியோரேயானுஞ் செல்கிறேன்பெண்ணிடந் தூதுவனாய், ஆவதழிவதுந்தெய்வச்செயல்பிற கடியன்பேரில்வருத்தம்வேண்டாம், (55)

இப்படியுரைத்துத்தமயந்தியரண் மிசைந்தங்குநளன்சென்றபின்னற், கொப்பெனப்பார்த்துத் தமயந்திமூர்ச்சித்துக் கோரியாசனத்தமருமென்ன, (56)

ஆனவரசனழகைக்கண்டுசொக்கி ஐயனேநீராரறையுமென்ன, தானுந்தேவர்தூதன் நானுரும்பிடதந் தன்பதியாள் நளனென்றுரைப்பார், (57)

இந்திரன்குபேரன்வருணன் தருமன் யிவர்களுன்னைமணஞ்செய்திட, அந்தோயென்னைவிடநான்வர நின்கார்யம்யாதெனக்கேட்க வவள்சிரித்து, (58)

நல்லமொழிதனைச் சொல்லவந்நீர் பட்சி நாட்டியதெல்லாமறந்துவிட்டீர், தொல்லைவருந்தேவர் யெனக்குத்தந்தையாம் துரைவினுரைப்பேன்கேளுமென்ன, (59)

அன்னம்வந்துதம் மழகைச்சொல்லமணம் யான்செய்யவிருக்கயிதுவரை, கன்னல்வில்மாரனுல்கலங்குமெந்தனைக் கல்யாணஞ்செய்யக்கருதுமென்று, (60)

அப்படிநீர்செய்யமாட்டீரெனில்வேறு யாரையும்நான்மணஞ் செய்யமாட்டேன், இப்போதென்னுயிரைவிட்டிடுவேனுறி யின்பேரில்சாட்சிநீரறியென்ன, (61)

சதுரிகழ்த்திடக்கேட்டுநளபதியிந்திரன்குபேரன்வருணன்யெமன், மாதேவரிடம்வந்துரைக்க அன்னவர் மர்மமறிந்தோமரசேயென்று, (62)

ஆனதறிந்துதேவர்செல்லநளனோடைம்பத்தாறு தேவர்களும் வரத், தானறிந்துவீமன்யிருத்திநாள்பார்த்துத் தாதியுடன்றமயந் திதன்னை. (63)

மங்களமாகச்சிங்காரித்துக்கல்யாண மண்டபமழைத்து மன்ன வர்கள், தங்கள்பெயர்தனைத்தாதிசொல்லிவரத் தானறிந்து தமயந் திவர. (64)

அங்கவங்கஞ்சீனம்கலிங்கம்நேபாள மய்யோத்திசிந்துமச்சகூர் ச்சரம், தங்குஞ்சேரம்சோழம்பாண்டியும்கேரளம் தாவும்விராடத்த ரசரென்ன. (65)

கோசலம்பாஞ்சால மொட்டியம்டெங்கணங்கொங்குகாஸ் மீர மரசரென, ஆசையுடன்சொல்லக் கேட்டுத்தமயந்தி அறிந்துநளனை ப்பார்த்துவர. (66)

இந்தப்படிசொல்லித்தாதியும்வந்தங்கு யேற்கும்நிடதம்நளனெ னவே, அந்தவிடமுரைசெய்யத்தமயந்தி யானவள்பார்த்துற்றுத்தா ன் நினைத்து. (67)

பூவினில்நளனென்பவரொருவரே பொருந்திநால்வராய்த்தாமி ருக்க, தேவர்செய்சூதிதுவென்றுநியானிக்க சிக்கிரம்நால்வருந் தேவராகி. (68)

விண்ணிடஞ்செல்பவர் நீயும்நளனும் விரும்பித்திருமணந்தா னுஞ்செய்து, மண்ணில்சுகக்ஷேமமாகவேவாழ்ந்திடவாழ்த்தினோம் நீயறியென்றுசொல்லி. (69)

இப்படிதேவர்கள் சென்றபின்ரதியோ யிந்திராணிமேனகை யோரம்பையோ, கொப்பெனவேந்தர்கள்தமயந்தியின்றன் கோல த்தைக்கண்டங்குரைத்தார்கள். (70)

மஞ்சவழகும்மைப் பொட்டழகும் நல்ல வாயிதழ்தாம்பூலத்தி ன்னழகும், கொஞ்சும்படிவிற்புருவத்தினழகுங் கூந்தலழகும்நாம் யென்னசொல்வோம். (71)

நாசியழகும் நளினக்கண்ணழகும் நாடுங்கரந்தன்னியத்தழகு ம், வீசியமார்பு வயாழகுந்துடை மேவியகாலழகென்ன சொல் வோம், (72)

பட்டழகும்வாயிற்பல்லழகும்நமைப் பார்க்குங்கடைக்கண்ணி ன்றுணழகும், இட்டபூஷணத்தின்றன்னழகுமிந்த மங்கைபோற்கா ண்கிலோமென்றிருக்க, (73)

மத்தளம்பிட்டல்தம்பூர்ஜாலர்வீணையும் மல்லரிநாகசுரம்பேரி, சத்திக்க அண்டம்வெடித்திடநளன்மேற் றமயந்திபுட்பமாலையிட ()

தேவர்களானவர் நளனுக்குவரம் சீக்கிரமாக வளித்துவிட்டு, ஆவலுடன்றிருக் கல்யாணமண்டபம் அமர்ந்திருந்தன ரவ்விடத்தில், (75)

கல்யாணமண்டபஞ் சிங்காரித்தார் வேந்தன் சொல்லியசொற்போலசெய்தார்கள், எல்லோருமானந்தமாய்வந்துகூடினார் யெங்கெங்குநின்றுகூத்தாடினார்கள். (76)

வாழைகமுகுகள்நாட்டினார்கள்நெடு வானமட்டும்பந்தல்போட்டார்கள், ஆழிபோற்றிரையையிட்டார்கள் அலங் காரமாகசாலர் கட்டினார்கள். (77)

தங்கத்திறற்றூணைநட்டார்கள் - மிக - தாவியகண்ணாடி மாட்டினார்கள், பொங்கமுடன்பொம்மைப் பட்சிலங்காபுரு பொற்சிட்டு மேற்கட்டிலமைத்தார்கள், (78)

மாணிக்கத்தீபங்கள்யேற்றினார்கள்-நல்ல - வாடைகஸ்தூரிகள் தீட்டினார்கள், ஆணிப்பொன்றொடைகள்சாற்றினார்கள்பன்னீ ராகத் தெருவெங்குமூற்றினார்கள், (79)

சந்தனத்தால்கோலந்தீட்டினார்கள்-பஞ்ச-தருவைநன்றாகநாட்டினார்கள், சுந்தரப்பாலிகைதூற்றினார்கள்நருந் தூபமுந்தீபமுங்காட்டினார்கள், (80)

மத்தளம்பிட்டல்தம்பூர்ஜாலர்வீணையும்மல்லரிதித்திநாகசுரமும், சத்திக்கஅண்டம் வெடிக்கநளன்வீமன் றனைதக்கண்டு மகிழ்ந்தார்கள். (81)

சிவனுமைவேதன்வாணியும்சுப்பிர மண்யனும்வள்ளியானைமுகனும், அவனில்வல்லமைபயிந்திரன்றன்றேவி யமரர்முனிவர்யாவர்களும், (82)

மாதவர்பூசுரர் மாங்கல்யப்பெண்களும் வந்தங்கம்மண்டபஞ் சேர்ந்தார்கள், சாதகமாய்நளன்கங்கைதீர்த்தமாடி-ஜவ்வாதுசந்தனந்தானுரித்தான், (83)

மாலைமகுடஞ்சரப்பளிப்பட்டமும் வாகுவளையம்பதக்கம்வளை, காலணிகைவளை பீதாம்பரம்பட்டுக் கருதியாவுந் தரித்துக்கொண்டான் (84)

தாரணியோர்க்கெலாந்தாந்தமயந்தியைச்சாரநளனருகில்வைத்தபின், சீருடன்வதிட்டர்தர்ப்பைகொள்ளவங்கு சேரத்தண்டுளம்பரப்பினார்கள். (85)

உத்தமமுனிவர்மந்தரஞ்சொல்ல-வப்போ-வோமாக்கினிவலங்கொண்டுவர, நத்தியேதர்மங்கள்தான்செய்யசத்தியம் நாடியுலகில்நிலைத்திருக்க. (86)

சல்லாபமாகவே வீமனுந்தன்பெண்ணைத் தான்பிடித்துநளன்கைதனிலே, எல்லோருமறியத்தந்தான்றமயந்தி யேற்றகரம்நளன்முன்பிடித்தான். (87)

மங்களகாரியந்தான்முடிய-வங்கு- மாவிஷ்ணுலட்சுமிபோலெழுந்தார், தங்கிடும்நற்றீயைச்சுற்றிவந்தான்றம யந்திகாற்றாக்கியம்மியில்வைத்தான். (88)

முன்னேயருந்ததிகாட்டிவைத்தான்-மோன- முனிவர்தாய்தந்தைமார்சரணம், அன்புடன்சேவித்துத் தமயந்தியுடன்அணுகி யவ்விடம்வீற்றிருந்தான். (89)

வானவர்பூமாரிதூற்றினார்கள்-அங்கு- மாமுனிவராசிர்வாதஞ்சொன்னார், நானிலமாசர்பொன்மலரிறைத்தார் நாடிப்பெற்றோர்கள் வரிசையீந்தார், (90)

பற்றுள்ளபந்துக்கள்மொய்த்துக்கொண்டாரங்கு பாவைசுமங்கலிகள்கூடி, அற்றையப்போதினிலானந்தமாகவே யாவருஞ்சோபனங்கொட்டினார்கள், (91)

இந்திரனும்நளனிடஞ்சிலவுபெற்றே கச்சனியனெதிர்வரவும், விந்தையுடன்வெகுசீக்கிரமாக விரும்பிச்செல்லுங்கார்யஞ்சொல்லுமென்ன. (92)

ஆனதோர்காரியஞ் பூதலத்தில்வீமன் 'அவன்மகள் தமயந்தியின்றன், தானழகுக்கெவர னவரிலையென்று ரினிலுள்ளவர்கள் சாற்ற, (93)

அப்படிக்கொற்றப்பெண்ணுக்குக்கல்யாண மாமதைச்சென்றுயானுஞ்செய்துவர,கொப்பெனச்செல்கிறேன்செய்துவரிவிடங்கொரிக்கொடுத்திடவேண்டுமென்ன. (94)

இம்மொழிகேட்டங்குதேவர்களும்நகைத் தெம்மாலானதந்தரஞ்செய்துபார்த்தோம், அம்மொழிபொய்யாகினளினம னமுமங்குதமயந்தியவள்செய்ப, (95)

ஆதலால்நாங்களும் வந்தனம்நீர்வாரும் அய்யனேயென்றிவர்கள்நிகழ்த்த, சாதகமாய்க்கேட்டுயீரேழ்வுலகமுந் தான்கலங்கக்கோபமுண்டாகி. (96)

விண்ணவரேயிதுயென்ன அனியாயம் வேண்டித்தேனரானபேர்கள்நீங்கள், மண்ணையாளும்நளன்வுங்களையிப்படி மாபங்கப்படுத்தினான்பாரும். (97)

அப்படிச்செய்யவருத்தம்வேண்டாம்-யெந்தன்-ஆண்மையைச் சொல்கிறேன்சற்றுகேளும், இப்பநான்சென்றொரு சிற்றரசனைச் சூதிவனிடமாடச்செய்திடுவேன். (98)

செய்தபின்புநளன்செல்வம்பூமிசீமை செம்பொன்னாபரணமெல்லாந்தோர்த்து, உய்யமணஞ்செய்தபத்தினியைப்பிரித்தோட்டுறேன்காட்டினில்பாருமென்ன. (99)

மாரனைப்போலொத்த மேனியைக்குலைத்து மாநிலமுள்ளோர் பழிக்கச்செய்து, சாரமற்றசிற்றரசர்க்குச்சமையல் தானிவன்செய்ய நான்வைத்திடுவேன். (100)

வெய்யவன்மதியிவ்வுலகுள்ளவரை விரும்பிச்செய்யும்யென்காரியத்தைப், பொய்யாகாமலிதையாவர்களுஞ்சொல்லப்போகிறேன் நான்செய்யப்போங்களென்ன, (101)

அங்குயிவ்விதஞ்சனியன்சபதஞ்செய் தனாகிவிதர்ப்பநகர்வந்து தங்கிமறையவர்வேடமெடுத்திவன்றூர்மன்னன்நளனைவந்துகாண. ()

சத்தியம்பொறுமை சாந்தந்தெய்வபக்தி தர்மதானம்பூண்டிவனிருக்க, நத்திவந்தகார்யமாகாதெனச்சொல்லி நாடிப்பார்த்திவனுந்தான்முழிக்க. (103)

ஐயையோவாய்க்கொழுப்பு சீலையால்வந்த தக்கதைபோலாச் சேபிச்சேதி, பையவேசனியன்காலம்வரும்வரைப் பார்த்துக்காத்திருந்தான்வேந்தனிடம். (104)

ஈங்கிருக்கமன்னன் றமயந்தியைப்பார்த்தென் நகர்சென்றிடவேணும்பெண்ணே, பாங்குடன்நின்அன்னை தந்தையிடஞ்சொல்லிப்பரிந்துவாருமென்றேயுரைக்க. (105)

அன்னவள்கேட்டன்னைதந்தையிடஞ்சொல்ல அவர்கள்மூர்ச்சித்தாலெழுந்து, கன்னல்மொழியாளேகோத்திரம்விளங்கக்கண ன்பின்செல்லவேண்டுமென்று. (106)

ஆனைபரியொட்டைப்பல்லக்குவஸ்திர மாபரணங்காணிசீமையாடு, தானைமுதல்மருகனுக்குச்சீதனந் தானீந்துவீமனுஞ்சொல்லுகிறான்; (107)

அன்புள்ளமாப்பிளே யாங்கள்தவஞ்செய்து அருமைப்பெண்ணைப்பெற்றுவளர்த்தோம், இன்பமாய்வைத்திடக்கைபிடித்திந்தனைம்பேருமென்றவர்விடைகொடுக்க. (108)

அம்மொழிநளனும்தமயந்தியுங்கேட் டவர்கள்திருவடிவணங்கி, செம்மையாய்நிடதம் வரச்சேதிகேட்டு சீமையையலங்கரித்தார்கள். (109)

மேளம்வீணைதம்பூர்முரசுபேரிகை மேண்மையுள்ளதவில்நாகசுரம், தாளமடிக்கவுலகெங்குஞ்சத்திக்கத் தமயந்திநளன்றனும்வந்தார். (110)

வந்தவர்க்காலங்கள்சுற்றுவோரும்-யெங்கும்- வாகுன்றிட்டிகழிப்போரும், சந்தோஷமாய்வித்து வான்கள்புகழ்வோரும் தாவிநளன்ஆசனத்தமர. (111)

அமர்ந்தபின்சனீஸ்வரன்றேவரிடம் ஐயையோ-நான்சொன்னகாரியத்தை, சமைந்தநளன்றனக்குச்செய்யபிவன்றன் ஞசாரந்தவருதிருக்க, (112)

என்னசெய்வோமென்றுயேங்கிமனம்நொந் திருக்கையிலோர்தினம்நளபதி, நன்னயமாய்மலங்கழித்திவரங்கு நாடிக்கைகால்சுத்திசெய்கையிலே. (113)

அப்போதுகாலிலிற்றண்ணீருமுள்ளிடை யங்குவொட்டாமலதாவிருக்க, கொப்பெனச்சனியன்மகிழ்ந்தங்கந்நேரம் கூத்தாடிச்சென்றுகுடியிருக்க. (114)

ஈதுநிகழ்ந்தபின்தமயந்திகெறப மீரைந்துதிங்களுமானவுடன், சாதகமாய்ச்சுதன்றன்பிறக்கநளன் தான்களித்துதானம்செய்துவைக்க. (115)

வேண்டியதன்பின்னேபெண்பிறக்கநளன் விரும்பித்தானம்செய்தேமகிழ, பூண்டிவர்கள்சுகமாகயிருந்திடப் பொல்லாதகாலத்தினல்நளனும், (116)

வேட்டையாடவேணுமென்றுசொல்லிவன வேடர்மந்திரியொடுதானும், காட்டினில்சென்றுசிங்கம்புலியானை கரடியைக்கொன்றுமடித்திடவே, (117)

இப்படிச்செய்துநளனுந்தன்பதி வந்தேக்கமற்றிவனிருக்கையிலே, முப்புரிநூலுடையந்தணனுய்ச்சனி மூனிந்துபுஷ்கரனிடஞ்சென்று. (118)

சென்றவன்நான்சனி யாவரையடக்குந் தீரன்நளன்றமயந்திகன்னை, இன்றுபிரித்தவரைக்காட்டிலோட்டி யிவ்வுலகெலாமுன்னையாளச்செய்ய, (119)

வஞ்சமெனக்கவர் செய்தார்கள்மனம் வாடுறேன்மன்னவனே கேளும், அஞ்சிப்பயந்தவனிடம்பகுதிகட் டசனென்றுநீயெண்ணாதே. (120)

தைரியமாய்ச்சென்றுசூதாடநீயழைத்தா லவனையானுமாடச் செய்து, வைரம்வைத்தவன்பாச்சிகையைத்தோர்த்து வாழிசூழ்வுலகமதையெல்லாம். (121)

நீயேயாளயேகசக்ராதிபதியாய் நீனிலமதில்நான்வுன்னைச்செய்ய, வையத்தையாளும்நளனிடஞ்செல்லென்ன வார்த்தையைக்கேட்டிவன்சம்மதித்தான். (122)

அந்தமொழியைப்போற்றன்னமைச்சர்களையழைத்துப்புஷ்கரனும்பிடதம், சந்தோஷமாயுள்ள சிங்காரத்தைப்பார்த்துத் தாவிநளன்கொலுவந்துகாண. (123)

கண்டுநளமஹராஜனைவணங்கிக் கைகட்டிநிற்க வவர்பார்த்து, கொண்டதோராசனமளிக்கப்புஷ்கரன் கும்பிட்டுத்தானவன்வுட்கார்ந்து. (124)

பாருலகையாளும்பார்த்திபரேசற்று பரிந்துபோதுநாம்போக்குதற்கு, சிருடன்சூதுகளாடுவோம்யென்றிங்கு செப்பிப்பயந்திவன்றானிருக்க. (125)

அவ்வுரையைக்கேட்டுசூதுகளாடுத லநீதமென்றுநளனுரைக்கச், செவ்வையாய்ப்புஷ்கர னுய்ந்துபிரமனுஞ் சிட்டிக்கஆடுவோம்வாருமென்ன. (126)

வெய்யவன்சுதன்சனியன்மகிமையால் வேந்தன்நளன்மனந்தான்கலங்கி, வையத்துவேந்தரையனுப்பிப்புஷ்கர வரசனையழைத்துள்ளேசென்று. (127)

காயும்பலகையுங்கொண்டுவரச்சொல்லிக் கைகடையத்தைப்பந்தயமாக, நேயமாய்வைத்தாடப்புஷ்கரன்தோர்க்கப் பின்னேர்சனியறிந்திங்கணுகியே. (128)

அனுகிநளன்ரதகஜதுரகம்யானை பதாதியவன்நகரும், இனைங்கிப்பிடிங்கியவனைத்தனியாய் யிருத்தவிசனமுற்றிருக்க. (129)

அந்தவேளைதனில்குடிகள்வந்து சூதாடலாமோவென்றுதாமுரைக்க, நொந்துநளனறிந்திவர்களைத்தள்ள நொடியிலுத்திரவதுசெய்ய. (130)

செய்தபின்குடிகள்தமயந்தியிடஞ்சேதியைச்சொல்லியிவரகல, அப்போநொக்தவளுட்வேந்தர்க்குயிவ்விதி யாய்வரநாம்யென்னசெய்வோமென்று. (131)

அந்தட்சணமிருபிள்ளையைத்தேரினி லன்புடனேற்றித்தன்றாயினிடம், சந்தோஷமாய்க்கொண்டுவிட்டுவரும்படி தமயந்தியவளுமனுப்ப. (132)

சகலசிறப்பும் புஷ்கரனுக்கீந்து சந்யாசியைப்போல வேடம்பூண்டு, அகம்கலங்கித்தன்றேவியிடம்வந்து யாவுஞ்சொல்லிமூன்றுநாள்வரையில். (133)

அன்னத்தையுன்றுமலவதிப்படவு மரியகின்றந்தையென்னைத் தேடி, கன்னல்வில்மயிலேமாபாவிக்குந்தனைக் கட்டிக்கொடுத்தனர் பாருமென்று. (134)

இப்பெரியபட்டணத்தினிலிருவர் யேற்றிருக்கமூன்றுநாள்வரையில், கொப்பெனவாய்மொழிபேசுவோருமன்னங் கொண்டளிப்போர்களிங்கில்லையென்று. (135)

ஆனதால்பூர்வத்தி லாருக்கன்னமது யாமுமளிக்காமல் பட்டினியாய்க், கானமயிலேநாம்செய்யயிப்பொழுது கருதிவாய்த்ததைப்பாருமென்ன. (136)

கெட்டவரைப்பூவில்கிட்டவேசேர்க்கார்கள் கிளம்பிநாமாகப் போனாலும், சட்டமாய்ப்பிறகேகிந்தித்துப்பேசுவார் தாரணிவழக்கமிதுவென்ன. (137)

மந்திரிமார்களுங் குடிகளும்வந்து மாசூதாடவேண்டாமென்றுசொல்ல, அந்தோவவரைநானதட்டிவிரட்ட யானும்பொல்லாதவனென்றுரைக்க. (138)

பூவிற்றகடையில்புல்லைவிற்க-புலி-யிருந்தகானில் பூனையிருக்க, மேவிச்சிங்கமிருந்தகுகையில்-நரி- வேண்டியிருத்தல் போலாச்சுதென்று. (139)

சல்லாபமாகப்பொன்னூஞ்சலிலேறியே தாதியர்அன்னம்கொடுத்துவர, உல்லாசமாயுறக் காட்டிலலையாமல் வுன்றந்தைவீடேகுமென்றுரைக்க, (140)

இச்சேதியைச்சொல்லக்கேட்டுத்தமயந்தி யிடிவிழுந்தாலும்நாயகனே, அச்சமன்றிமடி யேந்திவாங்கவேனு மதற்குப்பயமேனென்றுரைக்க. (141)

அம்மொழிகேட்டுநளபதிகாட்டினி லானமிருகமும்காய்கனியும், செம்மையாயிருக்குங்கல்முள்ளின்பேரினில் செந்தேனெபடுக்கவேணுமென்று. (142)

என்னபயமுறச்சொன்னாலும்- அவள்- யேற்றதன்நாயகனைப்பிரிய, அன்னமயிற்றமயந்தியாலாகாம லன்னவளுங்கூடச்செல்லுகையில். (143)

கானிசிருவரும்போகையில் சனியன் கருதியன்னங்களைவிடுக்கத், தானதிந்துவரநளன்கண்டதனைத் தன்றேவியிடந்தானுஞ்சொல்வான். (144)

அடிக்கும்பசிக்குச் சுவாமியும்பார்த்திந்த அன்னத்தைநம்மெதிரேயனுப்ப, பிடித்திதைச்சுட்டுநம் பசியாறுவோம்பெண்ணேபாரென்றானுஞ்சொல்லி. (145)

தொடர்ந்துபிடிக்கச் செல்லுகையிலன்னந் துள்ளியோடிச்செடிமறைவிலும், அடர்ந்தகாடுகளெல்லாம்நளன்றனை யலையச்செய்யுவளைவுத்து, (146)

நொந்தவனுருகி யன்னத்தைப்பிடிக்க நொடியில்வஸ்த்திரந்தன்னைப்போட, அந்தோபறித்துப்புஷ்கரனுமிதுவு மறிசனிமாய்கையென்றுசெல்ல. (147)

அங்குசனியிட மன்னங்கள்சென்றறைந்தகல யிவ்விடம்நளன்பார்த்து, மங்கையேநின்னையான்மணஞ்செய்யச்சனி வஞ்சகமுற்றவனென்னையிந்த. (148)

வாதனைக்குள்ளாக்கிவைத்திடவும்பிரு வண்ணக்குழந்தைகள்சென்றசேதி, மாதரசேதூதன் வந்தொன்றுஞ்சொல்லாமல் மயங்கிறேனென்றவனழுக. (149)

அப்போது பத்தினியன்னையிருந்தவ ளையனேநீர்யாவுமறிந்தவர்,இப்படிவந்தவிதிக்கழுகலாமோவென்று நளன்கண்ணைத்தான்துடைத்து. (150)

கட்டினகோமணத்தோடிருக்க-அவடன்-கண்டாங்கிப்புடவையைக்கிழித்துச், சட்டமாய்நளன்மேல்போத்திதுக்கந்தீர்க்கத்தானிருவர்வழிதான்நடக்க. (151)

அங்குவழிநான்குசெல்லப்பார்த்து-நளன் - ஆய்ந்துரைத்தெதங்குநாம்செல்வோமென்ன, மங்கையுங்கேட்டிந்தக்காட்டைவிட்டுங்கள்மாமிவீடுபோகலாம்வாருமென்ன. (152)

அம்மொழிகேட்டிருகாதினிலீயத்தை யங்குகாய்ச்சிவிட்டது போல்நளன், செம்மையாய்நான்செல்லக்கெட்டவரினத்தைச் சேரலாமோபெண்ணேயென்றுசொல்லி. (153)

போகிறவழிநின்றந்தைநகர்செல்லும் புத்திரனைப்பார்த்தங்கிருவென்ன, வாகுடன்வரக்கானில்காய்கனிதனை வருந்தித்தின்றுபுழுதிதனில். (154)

படுத்துறங்கிடவேணும்பெண்ணேயென்னப் பத்தினிகேட்டுப் பதைபதைத்து, அடுத்தகட்டமனுபவிப்பேனென்று யவளுஞ்சொல்லநளன்கேட்டு. (155)

ஆனதுயர்தனைநானும்நினையாமல் அன்னமேயுன்னால்மறந்திருக்க, தானுன்னைப்பிரியேன் நீயும்மயங்காமல் தானும்வாவென்றிவர் போகையிலே, (156)

கல்லுமுள்ளும்படுகுழியும்மேடுகள் கதித்தகாட்டினிலேசனியன், தொல்லைகொண்டிவர்கள் நடந்துசெல்வதைத் தோணியறிந்தனன்றாட்சத்தினால். (157)

அவ்விதஞ்சென்றுகுளத்தைக்கண்டுபுனல் அருந்தத்தமயந்திகளைத்து, செவ்வையற்றமண்ணில்படுத்துநித்திரை செய்கின்றதன்றேவிதன்னைப்பார்த்து. (158)

பொல்லாதகாலங்களிப்படிவரவும் புட்பசயனம்போய்பூமியது, நல்லதோர்பஞ்சணையாகவும்மிருகம் நாடித்தாதிகளாய்யிங்கிருக்க. ()

இவ்விதகாலம்வரலாச்சே இந்தப்பெண்ணுக்கு நான்சொன்ன முன்பேச்சே, ஒவ்விப்படுங்கட்டம்பார்க்காமல்நானிந்த வுத்தமிதன்னைப்பிரிவேனென்று. (160)

தந்தைநகர்வழிகாட்டிவிட்டேன்-தையல்- தான்செல்வாளென்றுசனித்துணிவால், முந்தானையைக்கிழித்தரசன்கட்டியே முனைந்துநின்றவனேதுசொல்வான். (161)

இந்திரனைம்பத்தார் தேயத்தரசர்கள் யெல்லோரையும் வேண்டாமென்றுசொல்லி, சந்தோஷமாயிந்தப்பாவிதனைப்பார்த்துத் தானும்மணஞ்செய்தாள்பாருமென்று. (162)

அப்படிச்சொல்லியவன்நடப்பான்-பின்பு - யணுகிவந்துமுகத்தைப்பார்ப்பான், கொப்பெனப்பிரமனெழுத்தெனச்சொல்லிக்கோவென்றலறியேதானழுவான். (163)

பெண்ணாசையென்கிற சாகரத்தாலிவன் பேணியேகட்டுண்டுதான்கலங்கி, யென்னாதெல்லாமெண்ணிப்பசியால்நித்திரை யிப்படிப்போகிறாளென்றறிந்து. (164)

சுந்தரமாகவேபெற்றுவளர்த்ததன் சுற்றமுறவுகளைமறந்து, வந்தென்னைச்சதமென் றிங்குநம்பின வரிவையைவிட்டுநான் போரேனென்று. (165)

இப்படிச்சொல்லியேசற்றுபோவான்-பிற-கிசைந்துவந்துமுகம்பார்த்து, கொப்பெனப்புலம்பி மூர்ச்சித்தெழுந்துபின் கோரியங்குநின்றுரைக்கலானன். (166)

மாதவாகோவிந்தா நாராயணா-என்-மனையாளைவிட்டிதோ நான்போரேன், ஆதரவற்றவளாதலால்காட்டினி லன்புடன்காத்திடவேணுமையா. (167)

சிங்கம்புலியானைகரடிபன்றியும் செந்நாய்புலிமிருகங்களினால், தங்கிடும்பேய்களால்பிடர்கள்வாராமல். தாய்வீடுசேர்த்திடும்சாமியென்று. (168)

இப்படிச்சொல்லித் தன்பத்தினியைவிடுத் தேகியவன்காட்டில் போகையிலே, அப்போதுசனியன்அக்கினியைவிட் டரசனைத்துண்புயியற்றச்செய்ய. (169)

ஆனதுபோல்காட்டில்மூங்கிப்புதர்களி லக்கினிபிடித்தெரியநளன், தானகப்பட்டுப்புகையிற்றத்தளித்துத்தன் றேவியையெண்ணித்திரும்பையில். (170)

தீயில்விழுந்து சனியன்பாம்பாகியே சென்றவதியுற்று வேக்கைப்பார்த்து, வாயாலழைத்துமையடைக்கலமென்றேன் வன்புடன்யென்னைநீர்காருமென்ன. (171)

ஆபத்துவேளையிதுவென்றெண்ணி-நளன் - அரவைப்பார்த்தனுகிரகத்தினல், பாபம்வருமென்று தன்னிடர்பாராமல் பரிந்துபாம்பின்வால்கைபிடித்து. (172)

தூக்கியெறியசிறித்தன்கைகடிக்கத்தோன்ற லுருவம்விகாரமாக, சீக்கிரம்பார்த்து தன்பத்தினியுரைத்த சேதியறிந்தங்குசொல்லுகிருன். (173)

ஆதரைபெண்பிள்ளை விட்டுத்துணியில்லா தலையுமென்னைச்சரணடைய, பாதகமென்றுநான்செய்யகிரிதனைப் பாப்பாத்திசெய்ததைப்போலச்செய்தாய். (174)

என்றுசொல்லசனியாகியபாம்பும் யெழிலுடன்கேட்டிதைத்தான்சிரித்து, நன்றுசெய்தேன்நீரும் பிழைக்கும்வழிக்கு நானுந்தன்ரூபம்மறைத்தேனென்ன. (175)

ஆதலாலும்மிட துன்பமெல்லாந்தீர்த்திங் காணபின்னீரும்யென்னைநினைத்தால், சாதகமாயுமக்கேற்பட்டரூபத்தைத் தானுஞ்செய்வேனென்றுசனிசொல்ல. (176)

நல்லதென்றெருப்பியே காடுமலைதாண்டி நாடும்யோத்தியாள்ரிதுபர்னன், வல்லசபைவந்தரசனைவணங்கி வாகுடன்நளனுஞ்சொல்லுகிறான், (177)

நவகண்டமதையோர் குடையாய்ஆண்ட நளச்சக்ரவர்த்தியின்கிட்டமாய்த், தவமெனச்சுயம்பாகியாயிருந்தேன் றான்செல்லக்கலியால்நானும்வந்தேன். (178)

வேணபடியானபாகங்களைச்செய்வேன் விரும்பிச்சாரதிவேலைசெய்வேன், காணவேயென்பெயர்பாகுகனென்பார்கள் கருதிவைத்தெனைக்காருமென்ன. (179)

அம்மொழிகேட்டு ரிதுபர்னனிருமென் றுரையநளனுமங்கிருக்க, செம்மையாய்பௌவிகளிருவரைவிட்டு சீக்கிரம்கிடதம்வந்துபார்க்க. (180)

பார்த்திடநளன்போய்ப் புஷ்கரனுள்வதைப் பரிந்தறிந்துவிதியீதென்று, வேர்த்திவனுருகி ஐயோத்தியாண்டிடும் வேள்ரிதுபர்னனைவந்துகண்டு. (181)

நளச்சக்ரவர்த்தி யின்னிடஞ்சேவகம் நான்செய்யக்காலக்கதியாலவர், தளர்ந்துசெல்லநான்யிவ்விடம்வரவும் தார்வேந்தேவைத்துக்காரென்றுரைக்க. (182)

ஆனமொழியைப்போலிவனையிருத்தவங்குநளனுமிவனைக்கண்டு, யோனமுற்றிருந்துதன்சேவகனென்று மூணைந்தறிந்துளங்கொண்டிருக்க. (183)

இப்படியிருக்கவங்குதமயந்தி யேற்றதாயில்நீங்கித் தானெழுந்து, கொப்பெனப்பதிவைப்பார்த்துத்தன்சிலையைக் கோரிக்கிழித்திருப்பதைக்கண்டு. (184)

இவ்விதஞ்செய்துதன் நாயகன்சென்றனை ரென்றறிந்துபூமியில்வீழ்ந்து, ஒவ்வியேமூர்ச்சித்துப் பிறண்டுருண்டவ ளுத்தமியழுதுசொல்லுகிறாள். (185)

மாலையிட்டுவந்தமன்னவரேமனை யாமென்னைப்பிரிந்தீரே, ஆலைக்கரும்புபோல் நானிருக்கத்துன்ப மாகுமென்றெண்ணி நடந்தீரே. (186)

என்னையறியாமல்நித்திரையும்வராயிப்படிமோசமுமானேனே' தன்னந்தனியேநீரென்னைவிட்டுச்செல்லத் தமக்குநான்குறைசெய்ய வில்லை. (187)

சந்திரனைப்போன்றதங்கள்முகத்தைநான் சாமியெப்போயினி காணப்போறேன், பொங்கியிலென்னுயிர் போயிநீரிருக்கப் பூமி யோர்மெய்க்கத்தவிக்கின்றேனே. (188)

என்னைமணஞ்செய்துகைப்பிடிக்கவுமக் கிந்தகட்டங்கள்வரலா ச்சே, மன்னவனேதமக்கேவல்பணிவிடை மாபாவிசெய்யாமல்நான் போச்சே. (189)

தாமிருக்கயிந்தக்காட்டினில்பயமுந் தானொன்றில்லாமலே,நா னிருக்க, சாமிநீர்பிரியத்துக்கத்தினுல்நொந்து தவிக்குமென்றனைப் பாருமென்று. (190)

நாயகன்காட்டினில் விட்டாரெனத்தூறி நான்சொன்னகுற்ற த்தைநீர்பொறுத்து, மாயனேகாருமென்றன்னவளுஞ்சொல்லி மன முருகியேதான்புலம்பி. (191)

வேதனுமெழுதயிவ்விதியாச்சுதே வேந்தேயென்னைவந்துபாரு மென்று, சாதகமாய்ச்சொல்லப்பட்சிமிருகங்கள் தானுமிதைப்பார் த்திருந்ததுவே, (192)

இப்படியுருகியிருளில்செல்லவும் யேற்றபட்சிமிருகங்கள்மரம், கொப்பெனயிருக்கப்பார்த்துத்தன்பதியைக் கோரிக்கேட்டிவளுஞ் செல்லுகையில். (193)

சனியின்மாய்கையால்பாம்பாகி-யிவள்- தன்காலிரண்டையுஞ் சுற்றிக்கொள்ள, அனியாயமிதற்கென்செய்வேன்வாருமென் றன்ப னைநினைந்தழுகையிலே. (194)

அச்சத்தங்கேட்டந்தக்காட்டினில்வாழு மதிசூரனானவேடனொ ருவன், உச்சிதமானகுல்லாவுஞ்சிந்தூரப் பொட்டோங்கும்சிங்கப்ப ல்சிவந்தகண்ணும். (195)

நாசிவிகார முடையவனுய்வில்லை நாடிக்கரமதிற் முன்பிடித்து, பேசிவந்தவனும் பாம்பைவெட்டித்தள்ளிப் பெண்ணழகைப்பார்த் துச்சொல்லுகிறான். (196)

உன்னதமுள்ளயென்மாதரசே-காட்டில்-ஒண்டியாய்யிங்காரை த்தேடிவர, அன்னைதந்தையுந்தன்பேருமூருரையென் றஞ்சாமல்வே டனும்கேட்கையிலே. (197)

பத்தினிகேட்டெந்தன் தந்தைபேர்வீமனும் பதியும்நளமஹாராஜனும், நத்திநவகண்டமாண்டவருமவர் நாடிப்போகத் தேடுகிறேனென்ன. (198)

அப்படிக்கொற்றயென்மன்னனையெங்கேனும்; அண்ணாவேநீர் பார்த்ததுண்டோவென்னத், தப்பிதமன்றித்தமயந்திகேட்கவும் தாவிவேடனதிகாதல்கொண்டு. (199)

ஒண்டியாய்வந்தவ ளானதினால்வேடன் வுள்ளமறிந்தங்குசொல்லுகிறான், மண்டலந்தன்னிலுன்பதியைப்போல்வேறு மானிடரில்லையோவென்றுசொல்லி. (200)

சின்னவயதினில் சீரழிந்துநிற்க சீதேவிபோலொத்தரூபவதி, அன்னமிருக்கப்பசிக்குண்ணாதவர்போல் அசட்டுவார்த்தைகள்பேசுகிறாய். (201)

சாங்காலந்தன்னில்நாம்காமலீலைசெய்ய சாத்தியப்படுமோவானதினால், ஆங்காலம்வாலீபம்வீணாகப்போகுதே யறிந்துரைக்கிறேன்கேளுமென்ன. (202)

இல்லத்தில்பததினி யெனக்குண்டவளை யேவல்பணிவிடைதான்செய்யநின், சொல்லுக்கிரண்டுநான் செய்யவில்லையெந்தன் சூரபராக்ரமம்சொல்கிறேன்கேள். (203)

கன்னமிடுவேன் புதைப்பெடுப்பேன்-வீட்டில்-கருதிச்சென்றுமுடிப்பெடுப்பேன், அன்னமேசொக்குப்பொடியிடுவேன் வலைகட்டிமிருகத்தைநான்பிடிப்பேன். (204)

தேனுந்தினைமாவும் வள்ளிக்கிழங்குகள் சீர்பெருமாமிசவகையெல்லாம், மானேயென்னில்லத்தில் வேணதுண்டுதின்று மதன்ரதிபோலிருப்போம்வாடி. (205)

ஆதலால்நீயெந்தன் பிராணசகியாகு மானமணவாளன் நானுனக்காம், பாதகனுரைக்கத்தமயந்திகேட்டுப் பதைத்தவனிடஞ்சொல்லுகிறாள். (206)

ஈனசாதியில்பிறந்தவனே - நெறி - யின்னதென்றறியாகிர்மூடனே, ஆனமறையறியாதவனே-யெந்தன்-ஆபத்தைதீர்த்தாயே அண்ணாவே. (207)

ஐந்துபேர்பத்தினிதாயாகும்-யிதை- யறியாமலாசைகொண்டவரை, நைந்துபோகயேமன்கதையாலடித்து நரகிற்றள்ளியேநாசஞ்செய்வான். (208)

மண்ணில்பிறந்தோர்பிறபெண்ணைநினைக்க மாதனமாயிசழகுப லம், கண்ணில்நிற்காமலேநசித்துப்போகுமாம் கண்டறிவீரெந்தன் அண்ணுவே. (209)

ஆனதால்நீசெய்த குற்றத்தைப்பொறுக்க ஹரியைத்தோத்திர ஞ்செய்திடுவாய், நானுனக்குத்தங்கையென்றறிநீகொண்ட நாட்ட ம்விடுமினிஅண்ணுவே. (210)

வேணுநீதியெடுத்துரைத்தும்-யெட்டி - வேப்பங்காய்க்கசப்பு மாருதுபோல், தோணித்தனக்குமரணமுண்டானதால் தோகைம ஹிமையையறியாமல். (211)

மானேமயிலேமரகதமேதேனே வஞ்சியேநீசொல்லும் வார்த் தையெல்லாம், தானெந்தன்செவியிலேறவிலேமோகந் தன்னைத்தணி த்திடவாருமென்ன. (212)

பாவபுண்ணியத்தை நாங்களறியோமே பார்த்தென்னைச் சேர யிதுதருணம், மேவியேவாவென்றழைக்கத்தமயந்திமெல்லியுங்கோ பித்துச்சொல்லுகிருள். (213)

மூர்க்கருணமுள்ளசண்டாளனே-யென்முன்- முகத்தைக்காட் டிநீ நில்லாதே, பார்க்குளெனக்குநீ செய்தநன்றிதனைப் பார்த்துப் பொருத்திருந்தேன்பாரும். (214)

இப்படியதட்டிச் சொல்லவும்வேடனுக் கிருகண்சிவந்தவன்மு ழித்துக், கப்பித்தமயந்திகைப்பிடிக்கவரக் கடவுளைத்துதித்துக்கற் பினள். (215)

வேடனுஞ்சாம்பலாய்ப் போனபின்பார்த்து விசனமுற்றுவழி தான்நடந்து, ஆடவனைநினைந்தங்குள்ளபச்சிலை யாவுந்தின்னவுயிர் போகாமல். (216)

சனியின்மாய்கையால் அக்கினியெறியத் தான்விழுந்ததில்யிற ப்போமென்று, கனிவாய்வீழத்தீயுங்கற்பால்குளிரக் கண்டுநமக்கு ச்சாவில்லையென்று. (217)

சிங்கம்புலியானைக்கரடிக்கால்களைச் சென்றுநாம்பிடிக்கக்கொ ல்லுமென்று, சங்கையறச்செய்யப்பயந்துவோடிடத் தனக்குச்சாவி ல்லையெனறுசொல்லி. (218)

நடந்துசெல்லக்கான்முனியைக்கண்டு நமஸ்கரித்துநடந்ததை ச்சொல்ல, கடந்தமுனிவர்திட்டியால்பார்த்துநற் காலம்வருமென் றுரைத்தபின்னற. (219)

மூன்றுவருடஞ்சென்றபின் நீங்கள் முன்போலரசைச்செய்து க்ஷேமமாக, சான்றுவாழ்வீர்களென்று சொல்லித்தம்மிட மிருத்தித்தவம்தீர்ந்தபின்னர். (220)

தாங்களுஞ்செல்லச்சுவாகுமகாராஜன் றன்பட்டணத்தின்வழியைக்காட்டி, எங்காமலம்மணியிவ்வழிபோமென் றிசைந்துரைத்தவர்கள்சென்றபின்னர். (221)

அவ்வழிபிடித்துத் தமயந்திபோக வங்குபொதிமாட்டுக்காரர் செல்ல,ஒவ்விப்பார்த்திவளைப்பேய்பிசாசென்றெல்லோ ரோடவொருவனும்நின்றுகொண்டு. (222)

அச்சமில்லாமலே நீரிந்தக்காட்டினி லாதரவன்றித் தனியாக, மெச்சும்ரூபமாய்வருபவராரென்ன மெல்லியதைக்கேட்டுசொல்லுகிறாள். (223)

வீமன்மகள் தமயந்தியாமென்பெயர் விரும்பிச்சனியன் மாய்கையினால், காமனைப்பழித்தயென்பதிநளனைக் கைவிட்டுக்காட்டில் தேடுறேன்யென்ன. (224)

இவ்வுரைகேட்டுப் பொதிமாட்டுக்காரனும் யெல்லோரிடமிதைத்தானுஞ்சொல்ல, அவ்வுரைகேட்டுப்பயமன்றியழைத்து அங்கிரகண்டிவரெல்லோரும். (225)

ஆலமரமுங்குளத்தைக்கண்டிவர்க ளங்குபொங்கியுண்டுதாம்படுத்து, கோலமாய்நித்திரைகொள்ளத்தமயந்தி கொண்டபுருடனைத்தான்நினைத்து. (226)

விசனப்படவும் அவர்கள்தேற்றப்பின் மெல்லியும்நடந்துவந்ததினால், அசந்துநித்திரைபோகப்பொதிமாட்டுக் காரரிடம்வந்தயானைக்கூட்டம். (227)

எருத்துமாட்டையும்அவர்களையுங்கிழித் தெரிந்துபொய்கையிற்றனிறங்கி, கருத்தில்மகிழ்ந்தங்காடிடச்சத்தத்தைக் கண்டுற்றுத்தமயந்தியெழுந்து. (228)

விதிவசமிதுயென்னைக்கொல்லாமலே விட்டதுபாரிந்தயானைகளும், அதிசயமென்றுபுலம்பிவிடிய வவளெழுந்துவழிநடக்க. (229)

சுவாகுவின்பட்டணந்தன்னைக்காண-யிவள்-சொகுசைக்கண்டு புகழ்வோரும், அவாவைநீக்கியேதானுந்தாதியென்று யவ்வீதிகடந்துசெல்லுகையில். (230)

பட்டத்துமன்னன் றாய்கோகிலாதேவியும் பாங்குடன்வுப்பரிகையிருந்து, சட்டமாய்ப்பார்த்திவள்ராஜன்றேவியெனத் தானறிந்துதாசியிடஞ்சொல்வாள். (231)

ஆடிதாதிகள் போலவள்நமது அரசகுலத்தைச் சேர்ந்தவள் போல், சீருடனிருக்கச் சென்றழைத்துவாரும் சீக்கிரஞ்செல்லுங் கோனென்றுசொல்ல. (232)

அந்தமொழியைப்போல்வந்திவரழைத் தரசியினிடமே தான் விடுக்க, பைந்தொடியும்பார்த்துநவகண்டமாளும் பார்த்திபன்றே வியோற்றேனுதென்ன, (233)

ஈதுரைக்கக்கேட்டுநானுங்கந்தர்வப்பெண் யேற்றமொழியுண் டுயென்றுயே, தாதிகளில்வேணகீர்த்திபெற்றுவந்த தாதியென்றெ ந்தனைச்சொல்வார்கள். (234)

அந்தமொழியைக்கேட் டமர்ந்திருமென்ன ஆளனைநினைத்து மாயவனை, சிந்தையிலெண்ணித்துதித்துநற்காலத்தை சேயிழையா ள்வரப்பார்த்திருந்தாள். (235)

இக்கதையிவ்விதமாயிருக்க-அங்கு- யேற்குமிரிதுபர்னனுக்குநள ன், தக்கபடிப்புசிப் பளித்துத்தாம்பூலந் தானீந்திவனுண்டு தான் படுத்து. (236)

நல்லநிலவிதுநமதுதேவியை நாடிக்காட்டினில்நாம்விட்டுவரத் தொல்லையடைந்தவள்யெவ்விதமானளோ தோனிநினைந்திவன்புலம் பையில். (237)

அண்டையில்நின்றிதை ரிதுபர்னனுங்கேட் டாருக்கும்பிந்தநி லவதனில், கொண்டிடும்பத்தினி தன்மேலாசைவரும் கோரியவரவ ர்க்கேற்றபடி. (238)

உம்மழகுக்குமேனுமக்குநேர்ந்திடும் வோங்கும்பத்தினியின்ற ன்னழகைச், செம்மையாய்நினைந்துமெத்தவுமெலிந்துசித்தஜன்கணை யால்நீர்வாடி. (239)

அவளைநினைந்துநீருமுருகியாற்றுதீர் காட்டில்விறசொடிக்கத், தவரிவிட்டங்கு நிலவிலெண்ணுதீர் தாமென்றிவன் யிழிவாகச்சொ ல்ல. (240)

அம்மொழிகேட்டு நளனுமென்றுபத்திற் காணதோர்தேவியு முண்டோவென்ன, எம்மைமைவத்தாளுநிறைவனேயோர்கதைமித்த ரையுண்டுநினைந்தேனென்ன. (241)

ஆனமொழியதை ரிதுபர்னனுங்கேட் டையையோநமக்கிதுவு மென்ன. தானெவ்விதமாகவிருக்கினும்பிதில் சாரமென்னவென்று தானுஞ்செல்ல. (242)

இந்தப்படியிங்கிருக்கவும்அவ்விடம் யிசைந்துவிதர்ப்பநகர்வீம ன், சிந்தைநொந்தவன் மகள்மருகனையும் தேடப்பிராமணர்தம்மை விட. (243)

காடுமலைவனம்தேயமெங்குஞ்சுற்றிக் கருதிப்பார்த்துக் களைத் திவரும், காடிக்காணோமென்றவர்கள்வுளம்யெண்ணி நடந்துசென் றுபதியிருக்க. (244)

விதர்ப்பநகர்புரோகிதர்புத்திரன் வேண்டுங்கிருஷ்ணையனென் றுரைப்போரும்,குதர்க்கமாடியேஜோதிடசாத்திரம் கூர்வோர்யெ ன்முன்னெவரில்லையென்று. (245)

விருதுபடித்துச்சுவாகுமஹாராஜன் விரும்புமரணில்சென்றிரு ந்து, கருதியவ்வரசனுக்குசாத்திரங்கள் கண்டுரைக்கஅவன்காத்து வர. (246)

இப்படியிருக்கவோர்தினமரசன் யேற்குந்தன்தந்தைக்குத்திதி செய்ய, அப்போதுகிருஷ்ணய்யர்அங்குவர அழகுளளதமயந்திரூப ங்கண்டு. (247)

என்னஅனியாயகாலமிது-இந்த-யேந்திழையாள்பதியைப்பிரி ந்து, அன்னமயிலரைட்சணமிருக்காளே யானுமிதற்கினியென்ன செய்வேன். (248)

ஓடம்வண்டியேரும் வண்டியோடமேரும் வோடுந்தண்ணீரி லாமணல்காணும், நாடுகாடாகிடும்காடுநாடாகிடும் நன்மறையுரை க்குமிவ்வார்த்தை. (249)

இந்தமொழியைப்போலோர்குடையாயாண்ட யிறைவனாநள ன்றனைப்பிரிந்து, வந்திங்குதாதியாய்வேலைசெய்திருக்க வைத்ததே பார்பாழுந்தெய்வமென்று. (250)

மேனிகுலைந்துசொரூபம்வேறாகியே வேற்றுருக்கொண்டுமயி ர்ச்சடையும், தானும்பிடிக்கநான்பார்க்கலாச்சே தமயந்தியென்றிவ ன்றான்புலம்பி. (251)

இருக்கவங்குதமயந்தியுங்கேட்டிவர் நமதுதந்தைவிப்பிரரென் று, உருக்கத்தோடநிந்தோடிவந்துவீழ்ந்து வோகோவென்றலறிச் சொல்லுகிறாள். (252)

நானும்பிறந்தவளர்ந்தஅருமையை நாடிநீர்அறிவீரையாவே, தானும்பிவ்விதியைநான்காணத் தெய்வமுந் தான்வைத்ததேபாரும் அய்யாவே. (253)

இப்படியழவுங்கேடடுச்சுவாகுமன்ன னறில்பெருந்தாயா தாதியுடன், கொப்பெனவோடிவந்திப் [illegible] யங்குபார்த்திருக்க. (254)



[stamp]

அங்குவத்திருக்கும்புரோகிதரும்-உந்தன் - ஆளான்ளன்புஷ்கரன்னுடனே, வங்கணமாகச்சூதாடிசகலமும் வருந்திதோற்றுப்பாதேசியாய். (255)

காட்டினில்சென்றதோர்சேதிகேட்டுஅங்கு கதித்தநகர்விதர்ப்பமாரும், தாட்டீகனுந்தந்தைதாய்சுற்றமுறவோர் தானுங்கலங்கிஅவதியுற்ற. (256)

என்னையறிந்தவரஅனுப்பயானும் யிங்குவரநீயுருமாறி, அன்னமேயிருக்கத்தெரிந்துகொள்ளாமலானேன் யிதற்குநான்யென்னசெய்வேன். (257)

பாழும்பிரமன்வுன் றலையிலிவ்விதம் பார்த்தெழுதி நின்பதியைவிட்டு, ஆழிசூழ்வுலகைவோர்குடையாகவே ஆண்டநளனைப்பிரித்தான்பார். (258)

ஆனதால்நீயும்பயப்படாமல்யெந்தன் அருமைத்தாயேநீர்யென்பிறகே, தானும்வரக்கூட்டித்தந்தையிடஞ்சேர்ப்பேன் தானுஞ்சொல்லத்தமயந்திசொல்வாள். (259)

நாடியென்பதியும்பயனத்தைவிட்டு நயந்தம்மாளிடம்நான்யிருக்கத், தேடியென்தந்தைபோல்தம்மைபார்த்தேனெனச் சேதிசொல்லச்சுவாகுதாயும்வந்து. (260)

என்னடியம்மாயிதுவும் புதுமைபோல் யிருக்குதுன்றுயும்நானும்கூட, அன்னமேபிறந்தோம்யிக்கோலமாகநீ யாகவுனைப்பார்த்தேன்யென்மகளே. (261)

மாறுவேஷமாகநீயிருக்க - நான்-உன்மர்மாறியாமல்போனேனேயோ, தாறுமாருகக்கஷ்டப்படதெய்வமுந் தான்வைத்ததேயாரும்யென்மகளே. (262)

இப்படிச்சொல்லியவளழுது-அப்போ-யேற்றவஸ்திராபரணமதைத், கொப்பெனத்தாதியர்தம்மைக்கொண்டுவரக் கூறல்போலுறவாங்கியேநின்று. (263)

வேதமறையவர்கைக்கொடுத்துயிதை விரும்பியாசீர்வதித்துநீரும், சாதகமாகயென்மகள்தமயந்தி தன்கையிலீயுமென்றேயுரைக்க. (264)

அத்தைப்போல்வாங்கிஅவருமீய - அதை-யானதமயந்தியவள்பெற்று, தத்தைமொழியாளுந்தன்வாயைத்திறந்து தானுஞ்சிற்றன்னையிடமுரைப்பாள். (265)

விப்பிரர்யிந்ததைவேண்டாமெனச்சொல்லி விரும்பியானதை வாங்கிக்கொண்டேன், இப்போதுமஞ்சளை நான்றரியேன்யேற்ற வஸ்திரந்தன்னையும்நானுடுக்கேன். (266)

அபரணங்களைநான்பூணேன் - வாயில்-அடைக்காய்வெற்றிலைதன்னைக்கொள்ளேன், சோபங்கொண்டுவர மெத்தையில்படுக்கேன் சொகுசாய்சந்தத்தைநானணியேன். (267)

இவ்வகையைநீக்கிநானிருக்கவேண்டு மென்பதியில்லாமலேயி ருக்க, ஒவ்வியவர்வரவோங்குஞ்சிறப்புடன் வுற்றிருக்கவேண்டும் யென்றாயே. (268)

என்றுரைக்கத்தமயந்தியின்சிற்றன்னை யேற்றிதைக்கேட்டிவ ள் தந்தையிடம், நன்றுடன்அனுப்பத்துயர்நீங்குமென்று நங்கையு ள்மனதில்நினைத்து. (269)

ஆனபல்லக்கில்அவளையேற்றி அழகுள்ளதாதியரைபின்னனுப் பி, ஞானநெறியுளபுரோகிதரைக்கூட்டி நடவும்விதர்ப்பமென்றனு ப்ப. (270)

அப்போதுவிதர்ப்பநகர்வரவங்கு வாளும்வீமனிடம்புரோகித ரும், கொப்பெனச்சென்றுயான்றமயந்திதன்னைக் கூட்டிவந்தேனெ ன்றவருரைக்க. (271)

சொன்னவுடன்கேட்டப்புரம்போக - அங்கு - தோனுந்தன்றாய் தந்தைக்குச்சரணம், நன்புடன்செய்துதன்பிள்ளைகளைப்பார்க்க நா டிப்புலம்பியேசொலலுகிறாள். (272)

ஆதரைதன்னையோர்குடையிலாண்டயென் றான்புஷ்கரனு டனேசூது, சாதகமாய்ஆடயெல்லாந்தோர்த்துக்காட்டில் தாவிப் பரதேசியைப்போல்நாங்கள். (273)

போகையில்பட்சிகள்வஸ்திரம்பிடுங்கப் புடவையைக்கிழித்து க்கொடுத்து, வாகுடன்நான்கட்டிக்கொள்ளச்சொலலவழி வஞ்சி யுன்றாய்வீடுபோருமென்ன. (274)

அம்மொழிகேட்டுங்கள்மாமியரணம் அமருவோம்வாருமென் றேஅறைய, செம்மையாய்ச்சென்றநான்கெட்டோர்போகலாகாதேசே யிழைநீயுஞ்செல்லுவாயென்ன. (275)

ஆனதோர்காட்டினிக்கந்தழலைபனம் அனைத்தின்றுமண்ணில் படுக்கவேணும், தானவர்சொல்லநான்பிறகேசென்றிடத் தாவிநான் நித்திரைசெய்யும்வேளை. (276)

சனுசயமென்றென்னைவிட்டுச்செல்ல யெழுந்துபார்த்தவர்யில் லாமல், மோதியழுதுநான்தேடிவரவங்கு முனிவர்களைக்கண்டுகே ட்க (277)

இன்னுஞ்சிலகாலஞ்சென்றபின்கலியும் பேகச்சுகம்வருமென் றுசொல்லி, மன்னன்சுவாகுநகர்வழியைக்காட்டி மாமுனிவோர்க ளுஞ்சென்றபின்னர். (278)

அந்தப்பதியாளும்அரசன்றேவியின் ஆனதாதியாகநானமர்ந்து, சந்ததம்வேலைசெய்திருக்கப்புரோகிதர் தானங்குவரக்குசலம்வோர் ந்து. (279)

இங்குவந்தேனென்றியம்பவுந்தாய்தந்தை யிதனைக்கேட்டவர்க ள்புலம்பி, பங்கமன்றிரவகண்டமனையாளும் பட்டத்துதேவியுந்தா னுமி. (280)

இவ்விதம்ஆபத்துநீபடப்பிரமன் யெழுதினனேபார்வுன்னைத் தேடி, எவ்விதம்வுன்பதியிக்கட்டம்பொறுத்தங் கிருக்கிறரோதெரி யோமென்ன. (281)

இப்படியவர்கள் புலம்பித்தேர்ந்துபின் யிறைவன்நளபதியைத் தேட, அப்போதுபிராமணர்தம்மைவிடவதை யுற்றுத்தமயந்தியோ டிவந்து. (282)

என்னைக்கொண்டபிராணநாதருக்குமுன்போல் யேற்றரூபமு மிருக்காதையா, மன்னவர்க்கன்னஞ் சமையல்செய்துசயம் பாகி யாயிருப்பார்பாருமையா. (283)

தெருத்திண்ணைகளில்படுத்துறங்குவார் தேடிநீர்யெங்குஞ்சலி யாமல், கருதிப்பார்க்கும்நகர்தனில்சொல்வதைக் களித்துரைப்பே ன்நான்கேளுமையா. (284)

அன்னநடையொத்தப்பெண்நித்திரைசெய்ய-அவள்-கட்டுஞ்சீ லையைத்தான்கிழித்து, நன்னயமாகவேதானுங்கட்டிக்காட்டில் நங் கையைவிட்டவர்சென்றவரும். (285)

அந்தப்பெண்ணையவர்காட்டில்விட்டுவர அவளுக்கோர்நிந்தை வந்துதானல், எந்தவிதமாமோயென்றுவிகடமாய் யிவ்வார்த்தையு ரைத்துவாருமென்ன. (286)

ஈதுரைக்கஅவர்கேட்டுமருவார்த்தை யியம்பநீங்களுமப்பதியி ன், சாதுபோன்றமொழியும்முகக்குறிப்புந் தானறிந்துவாருஞ்சாமி யென்ன. (287)

இவ்விதமாகவேதேயமெங்குஞ்சொல்லி யிசைந்தயோத்திநகர மாளும், செவ்வையுள்ளரிதுபர்னன்சபைவந்து சென்றுபிராமணர் யிவ்விதமாய். (288)

சொல்லிஅடவியிற்றன்றேவியைவிட்டுஞ் சூட்டுஞ்சீலையில்கொ ஞ்சங்கிழித்து, நல்லபெண்ணைத்தனியாய்விட்டுவிடதம் நளன்யென் பவரும்வந்தார்பாரும். (289)

மாசுபடிந்ததன் றேகத்துடன்வாயில் மாண்புடன் தாம்பூலம் போடாமல், தூசும்வுன்னதமாய்க்கட்டாமல்பதி தோறும்வரையி வ்விதமிருக்க. (290)

நல்லவோர்மாப்பிள்ளைதன்னைப்பார்த்து- வீமன்-நாடிக்கல்யாண ம்நடாத்திவைக்கத், தொல்லுலகிலிந்தப்புதுமையைப்போலத்தோ ணுமோபார்நீரும்வேந்தேயென்ன. (291)

இப்படியுரைத்துத்தமயந்தியவர் யேற்றநீதியைஅறிந்தவர்பார், கொப்பெனஅவரையெப்போகாண்பேனென்று கோரியவளங்கழு திருக்க. (292)

வீமனுந்தன்மருகனைதேடச்சொல்லி விப்பிரர்யெங்களைத்தான் அனுப்பப், பூமனேகாட்டில்வாழ்புலிபசித்தாலும் புல்லைத்தின்னு மோபார்நீருமென்ன. (293)

இம்மொழிதன்னைரிதுபர்னனுங்கேட்டு யேற்குந்திருவடியை வணங்கி, மும்மையைநீக்கிநவகண்டமாண்டதோர் முடிபெற்றநள மஹாராஜன். (294)

அப்படிக்கொற்றவர்சகலதர்மம் அறிந்தவர்க்கிப்படிக்காலம்வ ர, எப்படிப்பட்டவராஞலுந்தெய்வத்தின் யேற்றவிதியைக்கடவா ரென்று. (295)

ஆனலுமோர்காரியம் அடவியில்விட்ட அவர்பத்தினிதன்தங் கையில்லம், தானேவந்துசேரமாபாக்யமென்று தான்றளர்ந்திங்கவ ர்யில்லையென்று, (296)

எப்பதிசென்றிருப்பாரோ! சுவாமி-நீங்கள்-யேகிச்சென்றவரை ப்பாருமென்ன, அப்போதவர்களுங்கேட்டுவெளிவர அங்குநளபதி வோடிவந்து. (297)

போரவர்தங்களைத்தான்பார்த்து-நளன் -பொல்லாத காரியமெ ன்னசெய்தான், சாரமறிந்ததைநானுரைப்பேன்அந்தத் தையலையே ன்காட்டில்விட்டார்பாரும், (298)

கஷ்டத்தைக்காட்டில்அனுபவியாளென்று கருதித்தந்தைநகர் வழியை, சட்டமாய்க்காட்டினேம்செல்லுவாளென்றவா தான்விட் டுப்போகத்தப்பிதமென்ன. (299)

இத்தைஅறியாமலநீங்களும் யென்னென்ன யேசிப்பேசுகிறீ ரையாவே, சுத்தப்பொய்யைநிசமென்றிருக்கும்பிந்தத் தொல்லுல கோர்கள்வழக்காச்சே, (300)

உடனுயிருக்குமவொன்றுஞ்சம்பந்தமு முறவில்லாமலேதானி ருக்க, திடமுடன்யித்தைநீங்களறியாமல் செப்புரீர்வார்த்தையென் றிவன்சொல்லி. (301)

இப்படிச்சாற்றியவள்பதியவனுக்கேற்ற நியாயத்தைச்செய்திரு க்க, தப்பென்றெண்ணமல்தமயந்தியவளும் தான்தூரல்காலமென் றவன்செப்பி. (302)

செல்லவும் அக்குறிதன்னை அந்தணர்கள் சீருடன்பார்த்து வி காரமுறச், சொல்லியதையல்மொழிசரியிவனுஞ் சொல்லுரையால் நளனென்றறிந்து. (303)

வீமனிடம்வந்துபாவுஞ்சொல்லக்கேட்டு விரும்பியறிந்தவனும ங்கு, போமென்மகளிடம்போயுரையுமென்னப் போந்துதமயந்தியி டம்வந்து. (304)

அம்மணீகாடுள்ளதேயமெங்குஞ்சுற்றி யங்கொன்றுமில்லாம ல்அய்யோத்தி, செம்மையுடன்கொலுரிதுபர்னனிடம் சேதிசொல் லியாம்திரும்புகையில். (305)

விகுர்தரூபமும்கறுத்தமேனியும்விளங்கவொருவனேடிவந்து, அகமதிலதிகோபத்துடன்தர்மம் யாவுஞ்சொல்லியவருமடக்க. ()

இந்தப்புதுமையைக் கண்டோமென்றியம்ப யேற்றுத்தமயந்தி தன்புருடன், சொந்தமறிந்துரையாடினவரென்றுதோணியறிந்துதந்தையினிடம். (307)

ஐயனேவிப்பிரர்தம்மைதூஷணங்கள் யான்செய்யச்சொல்லி யெங்கும்விடுக்க, வையமெங்கும்யிவர்சொல்லக்கேட்டுத்திரம்வருந்தியுரைப்பார்யில்லாமல். (308)

என்னசெய்வோமென்றையோத்திரிதுபர்னன்யேற்குஞ்சபை போய்யிவர்வுரைத்து, நன்னயமாகத்திரும்பகோரத்துடன்நாடிவந்தொருவர்ஞாயஞ்சொல்லி, (309)

சென்றவர்யென்பதியென்றறிந்தேன்-யினி - செய்யுங்காரியம் நாம்யென்னவெனில், நன்றுடன்சாத்திரங்கற்றபெரியோரை நாடியழைத்துப்பலன்கேட்க. (310)

அன்னவர்சொல்லுரையைஅறிந்துநா மதன்படிநடக்கவேணுமென்று, கன்னிசொற்போல்மன்னன்சாத்திரங்கற்றோரைக் கருதி அழைத்தவர்கேட்க. (311)

தாரணியெல்லாமோர்குடையிலாண்ட-நற்- சற்சனன்நளனையிப்போது, சீருடன்ஆள்விட்டுத்தேடக்கிடைப்பரும் செப்பினேம்யிப்போதுநற்காலம். (312)

அந்தமொழியைக்கேட்டவர்க்குச்சன்மானம் அதுவும்மீந்தனுப்பியபின்னற், சந்தோஷமாகமறையவரைப்பார்த்துத் தமயந்தியவள்சாற்றுகிறாள். (313)

விதர்ப்பதேசத்தையாளும்வீமராஜன் விரும்பித்தன்மருகன்நளனை, இதமுடன்ஆளைவிட்டெங்கும்தேடயில்லாமல்வரும்பிருப்பதினால். (314)

தன்மகள்தமயந்திக்கிரண்டாவதுசாருஞ்சுயவரம்சாற்றிவைக்க, நன்மையாய்அனுப்பவந்தோமென்றையோத்திநாடும்ரிதுபர்னன்யிடம்போய்நீர். (315)

சொல்லஅவருடன்யென்பதியும்வரத் தோணும்பிள்ளைகளைநாம்அவர்பால், நல்லபடியனுப்பக்குறியறிந்து நாட்டுவோம்பின்னென்றுநங்கைசாற்ற. (316)

சாற்றியதைக்கேட்டு வீமனுங்களித்துத் தாமேசுவாமிசெல்ல வேண்டுமென்னப், போற்றவிப்பிரரும்அய்யோத்தியாள் புரவலன் ரிதுபர்னன்சபைவந்து. (317)

சகலபேர்கள்யிருக்கக்கேட்கும்படித் தமயந்தியைநளன் காட்டில், அகிர்த்தியமொன்றப்பெண்செய்யாதிருக்க அவளையவர்விட்டு வந்ததால். (318)

துட்டமிருகங்கள்கொல்லாமல்அந்தத் தோகைதன்தந்தையினில்லம்வந்து, கஷ்டப்பட்டுத்தன்புருடனைத்தேட ஆள்கருதிவிடவும் யில்லாமல், (319)

மூன்றாண்டுவரையில்சிறைவைத்ததுபோல் மொய்க்குழல்அவள்சிறையிருக்க, யீன்றவீமனதிந்தினியிரண்டாவதேற்றசுயவரம்செய்யவெண்ணி, (320)

எங்களைதம்பிடம்பிதைசொல்லச்சொல்லியேற்றனுப்பநாங்கள் வந்துசொன்னோம், அங்கவருரைக்கரிதுபர்ணனுங் கேட்டாச்சர்யமீதென்று தானினைத்து. (321)

செல்லுவோம்விதர்ப்பமென்றிருக்க - யிதை - நீரன்அருகில்நளன்கேட்டு, தொல்லுலகிருக்கும் பெண்களையினிமேல் தோணிநம்பலாகாதென்றிவரும். (322)

தன்னுளமெண்ணியேதாமிருக்க-அங்கு-தாவும்ரிதுபர்ணன்பாகுகனை, நன்னயமாய்ப்பார்த்துவிப்பிரர்சொற்போல் நற்றமயந்தியெனக்குத்தானும். (323)

கிடைக்குங்காலம்போலிருக்குதாதலால் கிளம்பிசீக்கிரம்அங்குபோக, திடச்சித்தமாயுரையெனபாகுகன் நீரனோநான்சேர்ப்பேனென்றுசொல்லி. (324)

பரியின்லாயமதனிற்செல்ல -நளனை- பௌவலிகனென்பவனும்பார்த்து, சரியாமோதமயந்திக் கிரண்டுதாரமணஞ் செய்கிறார் நீர்பாரும். (325)

நாடுநகரத்தைச்சூதிலேதோர்த்து நளச்சக்கரவர்த்தியுங்கானில்செல்ல, வாடியவரும்அவரைச்சேர்ந்தவரும் வன்னியரிடஞ்சேவகஞ்செய்ய. (326)

இப்படிக்காலம்வரலாச்சே-அவரை-யெப்போதுநாமினிபார்க்கப்போறோம், கொப்பெனச்சொல்லிஅழத்தேற்றியேநளன் கோரிஅறிந்துபுலம்பியுளம். (327)

நம்முடையபதிசெல்வம்புஷ்கரனும் நாடிஅடையாமதுபெண்டீர், இம்மைதனில்யிரண்டாமணஞ்செய்யநாம் யீதெல்லாம்பார்க்கவிதிவசமே. (328)

இப்படிக்காலம்வரலாச்சே-யிதை-யேற்றுநாம்நினைக்கிலென்னபலன், கொப்பெனச்சென்றுகுதிரைகளைக்கொண்டு கோரிக்கட்டித்தேரைக்கொண்டுவந்து. (329)

வீற்றிருமையனோவிதர்ப்பஞ்செல்லத்தேர் விளங்குதென்றுபாகுகன்சொல்லி, சாற்றக்குதிரையைப்பார்த்துரிதுபர்ணன் சந்தேகங்கொண்டவன்சாற்றுகிறான். (330)

என்னகுதிரையைக்கட்டினாய்பாகுகா யெப்படிப்போகும்விதர்ப்பநகர், அன்னமயிற்றமயந்தியைநான்கட்ட ஆகாதுன்மனம்போற்றோனுதென்ன. (331)

இந்தமொழியைநளபதியுங்கேட்டு யெத்தூரமாகயிருந்தாலும் விந்தையாய்த்தீனியுந்தண்ணீருங்கொள்ளாமல் வேகமாய்ப்போகும்விநோதம்பாரும். (332)

என்றுரைக்கரிதுபர்ணனுங்கேட்டுப்பின் யேற்றநல்லவஸ்திரா
பரணம், நன்றுடன்கட்டியேநல்லவேளைதனில் நாடிப்பிராமணர்
தாம்வாழ்த்த. (333)

தேரிலேரியவன்வீற்றிருந்து-அப்போ-சீக்கிரம்பாகுகனைப்பார்
த்துக், கோரிநடாத்துமெனச்சொல்லநளனும் கோனுமல்பரியைத்
தூண்டும்வேளை. (334)

காற்றுடிவையைப்போல்குதிரையும்பறக்கக் கருதித்தேர்போகும்
வேகம்பார்த்து, சாற்றியபாகுகன்மொழிகேட்டு ரிதுபர்ணனுஞ்சரி
யென்றேபுகழ்ந்து. (335)

வேகமுடன்செல்லும்தேரின் அதிர்ச்சியால் வீரன்புஷ்கரன்மே
ல்போட்டிருக்கும், வாகுள்ளவுத்தரீயம்விழப்பார்த்தவன்வாடியெடு
க்கத்தேர்நிறுத்தும். (336)

என்றுரைக்கஅதை அறிந்துபாகுகன் யிந்நேரம்மூன்றுயோச
னைதூரம், மன்றலரசேநம்தேரும்வரலாச்சேமார்க்கம்போய்த்திரும்
பக்காலமாகும். (337)

என்றுரையாடியவன்களைபாமலும் யேற்றவுற்சாகத்துடன்று
னும், நன்றுடன்குதிரையாவுக்கும்பசியை நாடாமலசெய்தானன்
றுனும். (338)

காடுமலைவனம்தாண்டிவிதர்ப்பமும் கருதிவரப்புஷ்கரன்பார்
த்து, தேடரியவித்தையென்றெண்ணித்தன் னுள்ளம் தேர்வரபாகுக
ன்தன்னைப்பார்த்து. (339)

என்ன அதிசயம்தாமரையின்ரசம் யேற்றதவளையறியாதுபோ
ல், மன்னனிடம்நீயிருக்கவுன்மஹிமை மார்க்கமாய்நான்அறியாம
ல்போனேன். (340)

மூடன்யென்னைப்போலவுலகில்யில்லை முனைந்தறிவாய்நீபா
குகனே, தேடிப்பெரியோர்கள்மோனமாயிருப்பர் தெரிந்தேன்வு
ன்னிடம்நானும்யின்று. (341)

ஆதலால்நீசமர்த்தனென்றுமெச்சினேன் அஸ்வயிருதயம்வித்
தைசொல்லெ, சாதகமாய்யிதற்குப்பிரதியாகச்சாற்றுறேன் நானொரு
வித்தையைக்கேள். (342)

அந்தோபுட்பழும்காயும்யிலையுமாய் அடர்ந்துசெழித்துதானி
மரம்,விந்தையாய்யிருக்கநான் அத்திரம்விட வேண்டியதனிலைக்கோ
ர் அளையாய். (343)

இருக்கும்அதனைநீநேரில்பார்த்துவி யெனறியம்பப்புஷ்கரன்ந
ளனும், சுருக்காய்தரைநிருத்திசெய்புமெனத் தோன்றல்புஷ்கர
னுமவிசாரித்து. (344)

தாளிமரத்தின்மேல்அம்பைவிட - அது- தப்பாமற்பூவிலேயைத் துளைக்க, ஆனநளனும்போய்ப்பார்த்ததிசயித்து ஆச்சர்யம்யென்றங் குகிற்கையிலே. (345)

அந்தமரத்தினில் சனியனுந்தோன்றி யாவர்கண்ணுக்குந்தெரி யாமல், சந்தோஷமாகநளனுக்குமாத்திரம் தன்னுருவைக்காட்டிநி ன்றபின்னற். (346)

சீக்கிரமுன்னேநளனைக்கடித்திட்ட சீருள்ளகார்க்கோடகனும் வந்து, தாக்கிக்கடிக்க நளன்சொரூபம்முன்போல் தானுகசனியன் வேந்தைப்பார்த்து. (347)

இரக்கங்கொண்டதிதுக்கத்துடனே யிறைவனேகேளுந்தமயந் தியால், நெருக்கவுமக்குப்பகுதியைக்கட்டும் நீனிலத்தரசன்றன்னை விட்டு. (348)

சூதாடநான்செய்து வும்முடையநகர்சொத் தெல்லாம்பிடுங்கி யிந்தபின்னற், பூதலத்தைஅவன்வோர்குடையாய்ஆளப் பொருந்த நீயும்வுன்பெண்டீர்காட்டில். (349)

போகச்செய்தபின் புருவாகவந்து நீபோட்டிருக்கும்துசைநா னுங்கொண்டு, வாகுடன்செல்லவுன்பத்தினிசிலேயை வன்புடன்நீயு ங்கிழித்துக்கட்டி. (350)

காட்டிலிருவருஞ்சேருமல்பிரித்துக் கைகட்டிச்சேவகஞ்செய்த வன்பால், ஆட்டிநான்வுன்னையும் அங்குசயம்பாகி யாகவைத்தவதி யெல்லாஞ்செய்து. (351)

செய்யாதகட்டங்கள்செய்துபார்த்தேன்-ஒன்று ம்- செல்லவில் லேயின்னிடமரசே, வையாதேசாபமும் வாயால்நீசொல்லாதே வாடி னேன்நான்சனியென் றுசொல்லி. (352)

வேண்டும்வரத்தைக்கேள் நான்தருவேனென்று விளம்பநளப தியுங்கேட்டு, ஆண்டருளும்தெய்வம் செய்தவிதிக்கிநாம் யாதுசெய் யப்போறோமென் றுரைத்து. (353)

வெய்யவன்குலத்தில்வுற்பவிக்க-நாமும்-வேறல்லயெனக்கிங்கெ ன்னவரம், வையமுள்ளோர்கள் யென்கதையும்யென்னையும் வாசிப் போர்கள்யிம்மரத்தினிடம். (354)

வந்தவர்கள்யிந்தபேர்களிடம்நீரும் வனுகாமல்நான்யிருப்பே னென்று, இந்தவரம்யெனக்கீயப்போருமென் றிணையடிபோற்றிந ளன்கேட்க. (355)

என்னைச்செய்தகஷ்டட்டம் யிப்பூமிதன்னி லிருக்கும்மாந்தர்தம் மைநீருஞ்செய்ய, அன்னவர்பொறுக்கார்யென்னைநினைக்கில் அவரி டம்போகாமல் நீரிருக்க. (356)

இத்தவரம்யெனக் கீயுமென்றுகேட்க யேற்றுச்சனியனும்மீத
ருளி, உத்தன்ரூபந்தன்னை மாறுசெய்தோம்வீமன் வோங்கும்நகரீ
குஞ்சென்றபின்னர். (357)

பத்தினிப்பிள்ளையும் முன்னுள்ளரூபமும் பாங்குடன்பெற்றுந்
தன்நகர்தனை, சத்தியமாய்நீரும் முன்போலோர்குடையாய்த் தாளு
ளப்போதீர்நற்காலம்வரும். (358)

தமயந்தியெனுங்கற்புநெருப்பது தான்யென்னைச்சுடநான்போ
ரேன்யின்று, அமர்ந்தேன்யிவ்விடம் போய்வாரும்மன்னனே யான்
போரேன்யென்று சனியன்சொல்லி. (359)

உத்தரம்பெறவும் நளன்வணங்கியே ஓடிவந்துரிதுபர்னன்றன்
னை, நத்திப்பார்க்கஅவன் யிந்நேரம்யேன்யென நாடிவிநோதத்தை
நான்பார்த்து. (360)

இருக்கநேரமும் ஆச்சுதென்றுதேரை யேகிவோட்டி விதர்ப்ப
ம்வர, பெருக்கங்கண்டன்று நளன்கரிபரி பேணியேமாவுத்தர்தம்பி
டத்தில். (361)

அடங்காமல்அதுயிருக்கமாவுத்தர் அறிந்துவீமனிடமேவந்து,
தடங்கலன்றிசொலத் தெரியும்யெனச்சாற்ற அவர்செல்லவீமன்பார்
த்து. (362)

இத்தனைஅதர்ச்சியாய்வரும்ரதத்தை யேற்றுப்பார்த்திவன்அதி
சயித்து, நத்தியேதன்பெண் தமயந்திக்குச்சொல்ல நாடியரணிருந்த
வளுற்று. (363)

பார்த்ததிசயித்தவள்யிருக்கரதம் பாங்குடன்விதர்ப்பரணம்வந்
து, நேத்தியுடன்ரிதுபர்னன்வீமன்சபை நெருங்கபாகுகன் லாயஞ்
சென்று. (364)

குதிரையைக்கட்டி லாயத்தில்யிருக்கக் கோரிவீமன்ரிதுபர்ன
னிடம், சதிரும்மன்னர்வரத்தமயந்திக்கு சாற்றுவோம்மாலை யென்
றவன்சொல்ல. (365)

அம்மொழிகேட்டு ரிதுபர்னன்யிருக்க அங்குதமயந்தி தாதிய
ரை, செம்மையாய்லாயமிருக்குஞ்சாரதியின் சேதியைஅறிந்துவா
ருமென்று. (366)

விடுக்கஅதுபோல்தாதியர்வந்து வேற்றுருக்கொண்ட சாரதி
யைப்பார்த்து, இடக்குவார்த்தைகள்பேசயிவர்வுரை யேற்றுத்தம
யந்தியிடஞ்சென்று. (367)

அம்மணியாங்களும் சென்றுரையாட அவரும்தம்முடையபதி
யென்று, செம்மையாய்அறிந்தோம்ரூபம்மாறுகத் தெரியுதுயென்
செய்வோம்யென்றுயே. (368)

அப்படிச்சொல்லத்தமயந்திஅறிந்து அன்புள்ளதாதியர்யிடம்பி
ள்ளை, கொப்பெனநீங்குகுறிகுணம்சாதமும் கொண்டுவாலாயஞ்சா
ரதிபால். (369)

விடுக்கத்தாதியர் ளையந்தனிக்வந்து வேண்டுஞ்சாரதியிடம்அ ணுக, அடுத்துத்தாதியர் தம்மைப்பார்த்துநளன் அன்புடன்அவர்மு ன்சாற்றுகிறான். (370)

பிள்ளையையெடுத்துநீர்வரநான்அந்தப் பிள்ளையையெடுக்கில்த வறென்று, உள்ளம்யெண்ணிநான்யெடுக்காவிடிலகத்தென்று கள் ளவன்யென்றெனைநீருஞ்சொல்வீர். (371)

இப்படியுரைத்துப்பிள்ளைகளைப்பார்க்க யிசைந்துதுக்கம்அதிக ரிக்க, அப்போதுவோடியிரண்டுபிள்ளைகளை அங்குசாரதியெடுத்தவ ரும். (372)

மடியின்மீதினில்வைத்தழுதுவிட்டு மன்னன்நளன்கண்ணில் நீர்பெருகப், படித்தழுதிடத்தாதியர்பார்த்துப் பார்த்திபன்நளனவ ர்பிள்ளைகளை. (373)

ஏனையாநீருமெடுத்தழுகிறீர் யென்றியம்பக்கேட்டுநளபதியும், தாவெடுத்தழுத்தம் யிடயெச்சிலென்று தானும்நினையாதீர் சொல் வேன்கேளும். (374)

மூன்றுவருடம்யென்பிள்ளைகளைவிட்டு மோகப்பட்டேன்நான் யிதைப்பார்க்க, போன்றிதுதின்னநான்யியவொன்றுமில்லைப் புரிந் துரைக்கசென்கையில்யில்லை. (375)

இப்படியுரைக்கத் தாதிகள்கேட்டு யிசைந்தரிதுடர்ஜனிடம்ந ளன், செப்பமாயிருக்கச்சேதிகண்டுவீமன் தெரிவைக்கிரண்டாஞ்சு யவரமும். (376)

என்றுசொல்லியிங்கு செய்திருக்கயின்னும் யேற்றசாரசவார்த் தைகள்சொல்ல, நன்றுடன்அதனைக்கேட்டுநளபதி நடந்தவார்த்தை யைத்தான்வுரைக்க. (377)

இவ்விதம்நடக்கப்பிறகுதாதிகள் யிந்தயிருபிள்ளைக்குச்சோறு, ஒவ்வியேநீர்கொஞ்சம் யியவேண்டுமென்ன வுத்தமன்யோசித்திதைப் பார்த்து. (378)

ஆகாநீர்வுரைத்தபடியான்அன்னத்தை அளிக்கநீவீர்வுண்பீரோ வென, வாருடன்வுண்ணத்தடையென்னபிள்ளைக்கு வயர்பசிகொஞ் சம்வீயுமையா. (379)

அப்படியாகில் யிருமென்றுவட்சென்று ஆனதிரையிட்டனனு மன்றி, கொப்பெனப்பாண்டம்அடுப்பேற்றிநீரன்றிக் கோரிச்சமை க்கநளபாகமாய். (380)

ஆனபின்சாதத்தைப் பாத்திரம்வைத்தங் கருமைத்தாதியரிட பீய, தாவெடுத்தேகி அவர்தமயந்தியின் றன்னிடமீந்துநடப்பைச் சொல்ல. (381)

அம்மொழிகேட்டுத் தமயந்திசாதத்தை அன்புடன்மஞ்சத்தின் மீதில்வைத்து, செம்மையாய்வணங்கித் தாய்தந்தைக்குக்காட்டி சீர் அன்னம்மணத்தைப்பாருமென்று. (382)

வந்திடுஞ்சாதத்தில்பாதியீந்து - யிவன்-வாசுதேவன்பதம்தான் வணங்கி, விந்தையாய்மின்றாப்புகலந்தசாதத்தை விரும்பியுண்டுநேரன்றியென்றுசொல்லி. (383)

அதனைச்சாப்பிட்டு அன்னையைப்பார்த்தன்னம் ஆனமணமும் வெவ்விதமென்ன, இதமுடன்கேட்கத்தாயும்விதைப்போலவென்றும்நான்காணேனென்கண்ணேயென்ன. (384)

ஈதுநிகழ்ந்தபின்தமயந்தியவள் பெற்றதந்தையின்பால்யென்பதியை, சாதகமாயழையுமெனவீமனுந் தான்கேட்டுச்செய்வேனென்றமைச்சர்பால். (385)

சென்றரிதுபர்ணன்சாரதிதம்மை சீக்கிரம்அழைத்தோம்நாம் யென்றுசொல்லி, நன்றுடன்அழைத்துவாருமென்ன அவர் நாடிரிதுபர்ணனிடம்வந்து. (386)

எங்களையாளுமிறைவன்வீமனுங்கள் மிசையுஞ்சாரதியை அழைத்து, பொங்கமுடன்வரச்சொன்னனெனச்சொல்லப் பொருந்தியோசித்திவன்பார்த்து. (387)

ஏதுக்குநமதுசாரதியைவீமன் பெற்றழைக்கிறார் யென்றுய்த்தவனும், வேதையன்றிச்சென் றழைத்துப்போமென்றிட விரும்பிப்பரிபின்லாயம்வந்து. (388)

சாரதியானநளனிடம்வந்தெங்கள் தார்மன்னன்வீமன்யெனுமரசன், சீருன்றம்மைஅழைக்கவாருமெனச் சேதிகேட்டங்கொன்றுமில்லையென்ன. (389)

ஆதலால்நானும்வரேனென்றுரைக்கவும் அமைச்சர்சென்றுவீமனிடமே, சாதகமாய்ச்சொல்லத் தமயந்திகேட்டுத் தந்தையைப்பார்த்தவள்சாற்றுகிறாள். (390)

என்னைப்பெற்றயெந்தன் றந்தையேபூவெலாம் பெற்றவர்ஒர்குடையாயாண்ட, மன்னனிடம்நீரும்மந்திரியைஅனுப்ப மார்க்கமறிந்தவர்வாராதிருல். (391)

தாங்களேசென்றழைக்கவருவாரெனத் தையல்தமயந்திதந்தைபக்கல், ஓங்கியுரைக்கும்மொழிப்படிவீமனும் வேடிலாயம்வந்தங்குற்றுப்பார்த்து. (392)

சாரதியென்றும் நளன்மருகன்கரந் தன்னைப்பிடித்தவர் வாருமென, நீரும்அங்கென்னையேன்அழைக்கிறீர்யென நேர்ந்திவர்கள் சபைவந்தபின்னர். (393)

ஆசனந்தன்னிலமருமெனவீமன் ஐயோநான்சாரதி யென்னநளன், பேசும்மொழிபார்த்துத்தமயந்தியழப் பெண்யென்னைக்கண்டுபுலம்புவானேன். (394)

இப்படிசாரதிசொல்லவீமன்கேட்டு யிப்பெண்ணின்மேல்திஷ்டியேன்வுமக்கு, செப்புமெனவென் சேயைவிட்டுழன்றுண்டு செல்லவும்பார்த்திருக்கிறேனென. (395)

ஆனாலுமிப்பெண்போல்அந்தமுனாபெண் அடியேற்கிருக்கயார் அழகினும், தானேபார்க்கஅதிதுக்கம்வரும்வேறு சாற்றுதலொன்றில்லைதார்வேந்தே. (396)

இப்படியுரைக்கத் தமயந்தியழ யேற்கும்நளன்பெனுஞ் சாரதியும், கொப்பெனவுன்றந்தை ரண்டாமணஞ்செய்யக் கோரிநளனவுனக்கேதுகவென. (397)

அம்மொழிகேட்டங்கு வீமனும்நளனென் றறிந்துமருகன்றன்னைப்பார்த்து, செம்மையாய்அறியுமிரண்டாமணஞ்செய்ய தேசத்தரசர்யிங்கில்லைபாரும், (398)

அந்தமொழிகேட்டுச் சாரதிநளனும் ஐயோரிதுபர்னன்சாரதிநான், வந்திருக்குமிரிதுபர்னனைப்போய் நளன்வளப்பமறியத்தான்றெரியும். (399)

ஆகிலும்நளன்றன் பெண்டிரைக்காட்டில் அலையவிடாமற்றந்தையினில்லம், வாகுடன்அனுப்பிநன்மைசெய்யவிதில் வந்ததப்பிதமெனநளனும். (400)

என்றென்னைநீங்களும் பெண்ணுநீர்யென் றியம்பக்கேட்டந்த மங்கைதானும், நன்றுடன்அன்று கிழித்திந்தசீலையை நாடிநன்றாய் அவள்வுற்றறிந்து. (401)

தமயந்திதானுந்தன்பதிதுசையும் தான்கட்டியிருக்குஞ்சீலைபார்த்து, அமர்ந்துயோசித்துக்கற்புடையாளவள் அவர்தன்னுளனென்றேயறிந்து. (402)

பார்த்தபின்சகிக்கமுடியாமல்-அவர்-பாதந்தனில்வந்துதான்வீழ்ந்து, வேர்த்துருகியிந்தக் கோலம்நான்காண விதிவசமோவென்றவளழுக, (403)

அங்கவளழநளன்பெனுஞ்சாரதி அன்னவர்கேட் டுன்பதிநளனும், மங்கையேவந்திடில்அவரிடஞ்சொல்வாய் மன்னன்சாரதிநான் பாருமென்ன, (404)

ஆனாலும்யென்னைக்கண்டேனழுகிறாய்வுன் அரியதந்தையுனக்குப்பதி, தானேயவர்தேட வந்திருக்கநீங்கள் சாற்றும்வார்த்தைவீணுக்கென்றுரைக்க. (405)

இந்தமொழிகேட்டுத்தமயந்தி - அவள் - இந்திராதிதேவர்கள் ரவிமதி, அந்தோநாரணனும்அறியநீர்பதியான பத்தினியும்நானுமக்கு. (406)

தம்முடையபிள்ளை யிதென்றுரைக்கத் தமயந்தியைப்பார்த்து நளபதி, எம்மிடஞ்சொல்லவீணாகும்யிதுவெல்லாம் யேற்றநளன்முன்னுரையுமென்ன. (407)

அப்போதுபத்தினி தமயந்தியவள் அக்கினிதன்னை வளர்க்கச்சொல்லி, கொப்பெனக்குதிக்கத்தாய்தந்தையழக் கோரிஅக்கினியுந்தூக்கிக்கொண்டு, (408)

யாவருமிருக்க அச்சபைவந்தநான் யாவரைச்சுடும்நெருப்புநானே, மேவித்தமயந்திகற்பெனுந்தீயென்னை வேண்டிச்சுடநானுந்தொர்ந்துவந்தேன். (409)

ஆதலால்பூமியை யோர்குடையாய்ஆண்ட அன்பரொனும்நளபூபதியே, சாதகமாய்பிந்தப்பெண்தன்மைக்காணச் சாற்றியமருமனையென்றறியும். (410)

பத்தினிதன்னை நீர்சேர்த்துக்கொள்ளுமெனப் பரிந்துநளமஹாராஜனும், நததியேநாரணன்ருள்மலர்துதிக்க நாடிஆசிர்வதித்தவர்வர. (411)

எல்லோரும்பார்த்துப் பணியநளன்நிற்க யிசைந்துசனியனைப்பார்த்து, வல்லவிஷம்போக்கும் யென்னகார்க்கோடகன் வந்துகடிக்கச்சொகுசாய்நளன். (412)

முன்னுள்ளருபமுண்டாகவும்-வேந்தனும்-முனைந்துகார்க்கோடகனைப்பார்த்து, என்னையும்யென்கதைதன்னைவாசிப்போர் யிவரைத்தீண்டநீர்வருத்தாமல். (413)

இந்தவரந்தரவேண்டுமெனக்கேட்க இப்புவிஆகாயந் தான்அறிய, அந்தப்படிதந்தேனென்றுவிடைபெற்று அவரேகத்தமயந்தியவள். (114)

சனியனைப்பார்த்துசாமிநீர்யெங்களை சங்கடப்படுத்திவைத்ததுபோல், கனிவுடன்பூவில் யுள்ளோரைச்செய்திடில் கருதியவர்பொறுக்கார்கள். (415)

ஆதலால்யெங்களைச் செய்த்துன்பத்தைப்போல் அதிகமாகநீர்செய்யாமல், சாதகனுசெய்வேனென்றிவ்வரந் தந்திடத்தாள்பணிந்தெனென்றவள்சாற்ற. (416)

உள்ளமறிந்திப் பூபெண்கள்ருதுவாகில் ஓர்முகூர்த்தம்அவர்களிடம்நான், கள்ளமன்றியங்கிருப்பேன்யெனச்சொல்லிக் கருதியவருஞ்சென்றபின்னற். (417)

வீமன்யினையறிந்துற்றுத்தன்ருதிவை வேண்டிவல்திருபாணத்தைநீர், தாமஷமன்றியெடுத்துவாருமெனச் சாற்றச்சென்றிவர்கொண்டுவவதை. (418)

வாங்கியரசனும் வேதியர்தம்மிடம் வாழ்த்திக்கொடுமென்றிவனீய,ஓங்கியேபெற்றிவர் ஆசிர்வதித்து கந்திருவர்கையினிற்றுன்கொடுக்க. (419)

பெற்றவுடனளன் தமயந்திதானும் பெருவிபுதினைக்காண்கூட்டி, உற்றிவர்கிளங்கரிதுபர்னன்கேட் டுள்ளம்வுருகித்தன்மெய்வாடி ()

ஓடியேவந்திவன்நான்செய்தகுற்றம் வகந்துபொருத்தெனையாளுமென, நாடிபுரைக்கநளன்கேட்டுன்நன்றியை நான்மறவேன்நீருஞ்செல்லுமென்ன. (421)

ஈதறிந்துரிதுபர்ணனும்அய்யோத்தி யேற்றுச்செலநளன்றன்சகியை, சாதகமாய்ப்பார்த்துத்தன்பதியனுகத் தாய்தந்தையைக்கேட்டுநீவாவென. (422)

என்றதுபோதசென்றிவளுரைக்கஅவர் யேற்றறிந்துதுக்கந்தான்பெருகி, நன்றலவென்றிதுதான்றெரிந்துபின்னற் நாடிக்கரிபரிதானையரவும். (423)

மருகந்தனக்கு வீமனுமீந்துந்தன் மாமயிலைக்காரும் யென்று சொல்லி, பெருகிவாழ்த்திவிடைகொடுக்கத்தன்னூர் பேணிவந்துபுஷ்கரனைக்கண்டு. (424)

முன்விளையாடின சூதைநாம்பிப்போ மூனைந்தாடுவோம்நீரும் வாருமென, தன்வினையனுகக்காய்பலகைகொண்டு தான்அமர்ந்து புஷ்கரனுடனே (425)

மாமுடியோன்சனியனைத்துதித்து மனதிலெண்ணியிருவருமாட, தாமுன்நின்றுபுஷ்கரன்செல்வம் பதியைத்தான்பிடிங்கியநளன் ஜெயிக்க (426)

நடந்ததைக்கண்டுபுஷ்கரன்கீழ்முழித்து நாடிமுகஞ்சோர்ந்து வேருகி, படிந்தசந்தோஷம்போய்துக்கமுண்டாகிப் பரவநளபதிதான்பார்த்து. (427)

என்னஅதிசயம்சிற்றரசன்நீரும் யென்பதிசெல்வம் சனியன்றன்னால், நன்னயமாகசூதாடித்தோற்றன்னம்நான் நாள்மூன்றுண்ணுமல்புறமிருக்க. (428)

அப்போதொருவரை யென்னிடம்வாரார்மல் ஆக்கினைசெய்வேனென்றேதடுக்க, ஒப்பிநீர்வுத்தரமிட்டதுமாகேத்தி வுன்பதிசென்றுநீர்கப்பங்கட்டி. (429)

இருமென்றனுப்பப்புஷ்கரனும்விடை யேற்றுப்பெற்றவன்நகரம்வந்து, கருதியுலகில் வாழ்வுதாழ்விரண்டும் காமினியோர்காண்கனவிதென்று. (430)

என்றெண்ணியிவனிருக்கவிதர்ப்பத்தை யேகிச்சிங்காரித்தவரிருக்க, நன்றுடன்அன்றன்னம்நாங்கள்கொண்டுவர நாடிப்புஷ்கரனுந்தான்றடுக்க, (431)

ஆதலால்குடிகள்யாங்கள்வரவில்லை யரசேபொறுத்தெமைக்காருமென, ஒதுங்குடிகள்மொழிகேட்டுநளன் வுற்றவிதிக்கினாமென்ன செய்வோம், (432)

சென்றங்கிருமென்றவர்களமரவும் தேசத்துமன்னர்கள்தான்வரவும், அன்றுநாககசுரம் மேளதாளந்தம்பூர் அண்டமதிர அடித்திடவும். (433)

B4
1/-37

தேவரும்பிந்திரன் ரம்பைமேனகை திலோர்த்தமையூர்வசிதன்னுடனே, மூவரும்வர்தங்குமண்டபஞ்சேர்ந்து முடுகியாவர்களும் வீற்றிருக்க. (434)

இருக்கச்சித்திரமண்டபத்தில்வுள்ளயேற்குந்தேவர்நரர்சேனைகொண்டு, பெருகும்அமைச்சரொடுநேயர்களும் பேணுந்துணையால் சிம்மாதனத்தில். (435)

சத்தியத்தைக்கொண்டு கைதனிற்செங்கோலைத் தான்பிடித்தன்று தமயந்திதன், பத்தினியோடமர்ந்துலகையாளும்படி கொண்டபிஷேகமுடிகொண்டு. (436)

அன்னையிலரசர்வேதியரும்நல்ல அமைச்சர்சந்திரசூரியரும், கண்டுதேவேந்திரன்யிருக்கமாதவர் களித்துமறையைத்தான்படிக்க.

ரம்பைமேனகைதிலோர்த்தமையூர்வசி ரம்மியமாகநடமாடக், கும்புகூடியங்கு மாங்கல்யப்பெண்களுங் கொண்டுகளித்தவ ராலஞ்சுற்ற. (438)

சோபனஞ்சொல்லவும்நாரதர்கீதத்தைசொருசாய்ப்பாடிக்கொண்டுவரவும், தாபமுடன்ஐம்பத்தாறுதேயமன்னர் தான்சூழக்கட்டியர்தான்புகழ. (439)

வதிஷ்ட்டன்கௌஷிகன்றாறுவாசன்நல்ல வகத்தியன்வியாஸன்வுரகேஸன், கிஸபவாசன்காஷீபன்பரத்துவாஸன் நேர்ந்துபூர்த்திலைச்சுற்றியங்கு. (440)

மாந்தழைவைத்துபூரணகும்பமதை மகிழ்ந்தவரவர்தான்கொடுக்க, எந்திநெய்யும்பொரிஅக்கினிதேவன் யெழுப்பிவலங்கொண்டுதானும்வர. (441)

அப்போதுவேதியர் நல்லமுகூர்த்தமென் றவசரமாய்க்கடுகடுக்க, செப்பியேமுனிவர்சோந்துநவக்கிரஹசீர்மந்திரஞ்செய்யும்வேளைதனில். (442)

அந்தச்சமையத்தில்பொடிவகைகளை யாவருந்தன்கையாற்றூனிறைக்க, சந்தோஷமாய்நவரத்தினபீடத்தில் தான்நளன்றமயந்தி அமர. (443)

அமர்ந்தபிறகு நாரணன்கரத்தால் ஆசிகூறிமுடிதான்புனைந்து, தமதிருப்பிடம் யாவர்களுஞ்செல்லத் தார்மன்னன்வுலகை யாண்டுவர. (444)

இப்பெருங்காதையூவாழ்நரர்அறிய யேற்றுபுக்ஷொப் மாமுண்டியாபிள்ளை, செப்பிடவீர ராகவதாஸன்செய்யச் சீர்பெறப்படிப்போர்வாழிதர்சேன. (445)

நளச்சக்கரவர்த்தி கும்மி.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# நூதன புத்தகம்.

நவரஸ அலங்கார சங்கீத

# சந்திரகாசநாடகம்.

இதுவரை அநேகமாய் நாடகங்கள்பாடி அச்சிட்டிருக்கிறதுந் தவிரபெரும்பாலும் அநேகவித நாடகங்கள்பாடி அச்சிட்டபடி எட்டுப்பிரதிகளிலிருக்கிறது; இவைகளை வாங்கிப்படித்தும் நாடகமாடியும்வருகிறது இவ்வுலகமுழுவதும் தெரிந்த விஷயமே: புதிதாய்ச் சொல்லலங்காரம் பொருளலங்காரந்தோன்றும்படி சந்திரகாசநாடகம்பாடி யச்சிட்டுத் தரும்படி சிலநண்பர்கள் நீடித்தநாட் கேட்டுக்கொண்டதினிமித்தம் பாலூர் பிரமஸ்ரீ சி. இராமசுவாமிஐயங்காரவர்களைக்கொண்டு செந்தமிழ்நடையில் நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, கோளுகைராஜன் தவஞ்செய்தல், சந்திரகாசனுற்பத்தி, கோரசிவர்க்கன், கோளுகைராஜனையுத்தம், காளியம்மன்பிரவேசம், குறுவதிநிக்குழியில்விழுதல்; தாதியர்கள்குழந்தையையெடுத்தேகுதல், குந்தளதேசபிராமணத்திகுழந்தையைவளர்க்குதல், காளிகாதேவி குறத்திவேடமெடுத்தல், சந்திரகாசனை பள்ளிக்குவைத்தல், பிராமணத்தி சந்திரகாசனை பிச்சைக்கு அனுப்புதல், குந்தளதேச மந்திரியோசனை, கூலியாளிகள்சந்திரகாசனை காட்டுக்கு அழைத்தல், சந்திரகாசன்சாலகிராமமந்திரம்செபித்தல், கொங்கணதேசத்தரசன் வேட்டையாடுதல், சந்திரகாசனுக்கு இளவரசபட்டாபிஷேகம், கொங்கணராஜன் சம்புகாமந்திரிவிசாரணை, சந்திரகாசன் குந்தளம்வருகிறது, சந்திரகாசனுக்கும் விஷையென்பவளுக்கும்கலியாணம், சம்புகாமந்திரிவிலக்கைவெட்டிஎரிதல், சம்புகாமந்திரி கொலையாளிகளை கூப்பிட்டு சந்திரகாசனை வெட்டச்சொல்லுதல், சந்திரகாசனுக்கும் சம்புகாபதிக்குங்கலியாணம், சந்திரகாசன் காளியிடம்வரந்துக்கேகுதல், சந்திரகாசன் பட்டாபிஷேகம்வரை வாசிப்பவர்கள் மனமகி[illegible]யும்படி டிராமாமெட்டில் 65-ஐநீகபடத்துடன் அச்சி[illegible]ட்டுத்தயாராகயிருக்கிறதுவேண்டியவர்கள் இதனடியில்கண்டவிலாசத்திடத்தில் வி. பி. போஸ்டுமூலமாயும், நேரிலும்பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| இதன் விலை ரூபா. | 1—4—0 |
| வள்ளிகயும்வரம்-விலை-ரூபா. | 1—0—0 |

விலாசம்.

அ. மாமுண்டியாபிள்ளை,

புஸ்தகர் திருச்சினாப்பள்ளி.